# தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்கள் இதழ்

(சு)வடி : 5. ஓலை : 4.
விடை (வைகாசி)

## பாரதிதாசன்

## நினைவிதழ்

ரூ 0/50 காசு

# தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே


**சுவடி 5 :: ஓலை-4**

விடை(வைகாசி) தி. பி. க௯௯அ (1967–மே)

பொறுப்பாசிரியர்:– பெருஞ்சித்திரன்

உறுப்பாசிரியர்:– தங்கப்பா

தென்மொழி மின் அச்சகம், கடலூர்–1


# நன்றிக் கடன்!



பாரதிதாசன் மறைந்து மூன்றாண்டுகள் ஓடின. தென்மொழி அவர்க்குச் சாத்தும் மூன்றும் இதழ் மாலை இது. தமிழ் மறந்தறியாத நம் நெஞ்சங்கள் அவரையும் மறப்பதில்லை. தமிழை நினைக்குந்தோறும் அவரையும் நினைக்கின்றோம். அவர் பாடல்கள், அவர் துணிவு, அவர்தம் வீறார்ந்த போக்கு எல்லாம் நம் கண்முன் நின்று ஒளிவட்டமிடுகின்றன. அவர் மறந்து போகாத ஓர் உயிர். தமிழ் மறவாத உயிரைத் தமிழரும் மறப்பதில்லை. கள்ளங் கவடற்ற அவர் இலக்கிய

நெஞ்சினுல் செரிக்க முடியாத — திக்குத் திசை காணமுடியாத அரசியல் சூழல் இன்னும் பல இலக்கியங்கள் அவரிடமிருந்து வெளிவர முடியாமல் தடுத்துவிட்டது. இறுதியில் பொருள் முட்டுப்பாட்டால் இருந்த முதலைத் திரைப் படத்துக்குக் கொட்டித் தம் குடும்பத்தைத் தாமே தூக்கி நிறுத்தவும், தம் அகக் கற்பனையைப் புறக்காட்சியாகக் கண்டு களிக்கவும் அவர் செய்த முயற்சி அவரை வாழ்வின் இறுதிப் படிக்கட்டிற்கே கொண்டு நிறுத்தியது.

நன்றி கெட்ட தமிழகம் இது. நன்றி மறந்த தமிழர் நாம். உயிருள்ள பொழுது அவரின் உருவத்தையும் காண மறுத்த நாம், அவர் மறைந்த இஞ்ஞான்றை விழா வெடுக்கின்றோம்; படிமம் செய்யத் திட்டமிடுகின்றோம; அவருடைய சிறு சிறு அசைவுகளைப் பற்றியும அறிந்துகொள்ள விரும்பி நிற்கின்றோம். தமிழர்தம் நல்லுணர்வை மண்ணில் புதைந்து போகாமல் தூக்கி நிறுத்திய அப் பாவலனுக்கு நாம் காட்டிய நன்றி கொஞ்சம்; நின்ற துணை சிறிது. தன்னந்தனியே பாடிக்கொண்டு தமிழ் வளர்த்த அப் புதுவைக் குயிலின் வறுமைப் பாட்டையும் கூட நாம் காண விரும்பவில்லை. முடிவு என்ன? அவர் வறுமையும் இலக்கியமானது; அவர் மனமும் சாம்பிப்போனது. இறுதியில்......! தம்மைத் தாமே தூக்கி நிறுத்திக் கொள்ளத் தெரியாத அத் தமிழ்நெஞ்சம், தம் குடும்பத்தையும் தெருவில் விட்டுவிட்டுத் தாம் புரந்த தமிழையும் இடை நிறுத்தித், தம்மையும் உலகுக்காக்கி விட்டுப் போய்ச் சேர்ந்தது. இனி, அவர் மறைவை எண்ணிக் காத்திருந்தவரெல்லாரும், அவர் புகழ் பாடித் தம் வயிறு வளர்க்கத் தொடங்கி விட்டனர். நாம் அவரை மறக்க முடியாத அழுங்கலால் அலங்கல் சூட்டி வணங்குகின்றோம்.

இனி, பாரதிதாசனுக்கு — தமிழ்ப் பெரும் பாவலனுக்கு நாம் ஆற்றவேண்டிய கடமைகள் பல உள. பாரதிதாசனை மதித்துப் பாராட்டிய தமிழர் அரசேற்று நடத்தும் காலம் இது. அவர் பாங்கிலும் நம் பாங்கிலும் நாம அவர்க்குச் செலுத்த வேண்டிய நன்றிக் கடன்கள் ஏராளம்! அவற்றை யெல்லாம் நாம் செய்தாகல் வேண்டும். உயிருடன் இருக்கையில் பேணத் தவறிய நாம், அவர் இறந்தபின்னாவது அக்கடன்களைச் செய்து நம் நன்றியுணர்வை அத் தலைமகனுக்குக் காட்டுதல் வேண்டும்.

தம் வறுமை நிலையால் குறைக்காசிற்கும், கறைக் கைகளுக்கும் விற்ற அவரின் நூல்கள் எல்லாவற்றையும் விலை கொடுத்து வாங்கி, அவற்றைப் பொதுவுடைமையாக்குதல் வேண்டும். இதுவரை வெளி வந்துள்ளனவும் வெளி வராதனவுமான அவர் எழுத்துகளைத் தக்கா ரைக்கொண்டு பதிப்பித்து, அடக்க விலையில் தருதல் வேண்டும், அவருடைய சிறந்த பாடல் தொகுப்பை எல்லா இந்திய மொழிகளிலும் அச்சிட்டு அடக்க விலைக்குத் தரும்படி தில்லி அரசினர் சார்பில் உள்ள இலக்கிய வெளியீட்டுக் கழகத்தைக் கேட்டுச் செயற்படுத்தல் வேண்டும். இவ்வழி அவர் கருத்துகளை எல்லா மக்களும் அறியும் வாய்ப்பு ஏற்படும். அவர் நூல்களில் சிறந்தனவாகிய குடும்ப விளக்கு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம் மூன்றில் ஒன்றுக்காகிலும் தில்லி இலக்கிய வளர்ச்சிக் கழகத்தின் பரிசைப் பெற்றுத் தருதல் வேண்டும். ஏறத்தாழ ஐம்பதாயிர உருபா கடனால் முழுகிப் போகவிருக்கும் பாவேந்தர் வாழ்ந்த வீட்டை விலைக்கு வாங்கி, அதை அரசுடைமை ஆக்கித் தமிழ் நினைக்கும் நெஞ்சங்களெல்லாம் நாள்தோறும் வந்து கண்டு மகிழ்ந்து போகும் நினைவு நிலையமாக அதை மாற்றுதல் வேண்டும். பாவேந்தரின் கைப்படிகள், கையாண்ட பொருள்கள், பயன்படுத்திய இருக்கைகள், மிசைப் பலகைகள், புகைப்படங்கள், மடல்கள் முதலியவற்றை அவர் குடும்பத்தாரிடமிருந்து விலைக்கு வாங்கி, அந்த நினைவு நிலையத்தில் வைத்துப் பேணுதல் வேண்டும். மேலும் அங்கு வந்து போவார் அவ்வப்பொழுது வாங்கிச் செல்வதற்கென்று அவர் நூல்கள் முழுமையும் புகைப்படங்களும் அடங்கிய விற்பனை நிலையமொன்றையும் அந் நினைவு நிலையத்தோடு இணைத்தல் வேண்டும். இதனால் அந் நிலையத்துக்கு வரும் வருமானத்தை அந் நிலைய வளர்ச்சிக்கே பயன் படுத்துதல் வேண்டும். இவ்வகையில் மேனாடுகளில் மக்கள் போற்றும் அறிஞர்க்காகவுள்ள தேசிய நினைவு நிலையங்களை முன்னேக்காக வைத்துக்கொண்டு செயற்படுதல் வேண்டும்.

— இவற்றையெல்லாம் செய்ய இப்பொழுதுள்ள தமிழக அரசால் தான் முடியும். மேலே கூறிய அனைத்தும் எந்தப் பொது அமைப் பாலும் செய்யவியலாத — அரசு ஒன்றாலேயே செய்ய முடிகின்ற ஆக்கங்கள். தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் தருகின்ற நோக்கமுடைய அரசாக இத் தமிழக அரசு இயங்குகின்ற காரணம் பற்றி, இவற்றை அன்பு வேண்டுகோளாக இவ்வரசினர் முன் வைக்கின்றோம். புறத்தே தமிழுக்கு நலஞ்செய்வது போல அகத்தே கேடு

செய்யும் தமிழ்க் கேடர்களால் இத்தகைய நலன்களைச் செய்தல் முடியாது. மேலும் நூல் வெளியீட்டுத் துறையிலும், அரசினர் பொதுப் பணித் துறையிலும் இதுநாள் வரை தமிழர்க்கு எவ்வகையான ஆக்கமும் செய்யப் பெறவில்லை. பேராயக்கட்சி ஆட்சியிலிருந்த காலத்தெல்லாம் இத்துறைகள் பார்ப்பன நலம் நாடும் துறைகளாகவே இருந்து வந்துள்ளன. அதன் விளைவாக பாரதியாரின் தகுதிறம் அளவுக்கு மீறி உயர்த்தப்பட்டுள்ளது. பாரதியார் ஒரு பார்ப்பனர் என்ற காரணத்துக்காக 'உலகப் பாவலர்' என்ற போலிப் பெயர் சுட்டியும் பாராட்டப் பெற்றுள்ளார். ஆனால், உண்மையில் பாரதியார் எந்த அளவுக்குப் பாராட்டப் பெற்றுள்ளாரோ, அதைவிடப் பாரதிதாசன் பாராட்டப் பெற்றிருக்க வேண்டும், தமிழரின் அறியாத துயிலுக்கும், பார்ப்பனரின் அறிதுயிலுக்கும் இஃது ஓர் எடுத்துக் காட்டு.

பாரதி ஓர் உணர்வுப் பாவலர் (ஆவேசக் கவி). பாரதிதாசன் ஓர் இயற்கைப் பாவலர். பாரதியார் அன்றிருந்த தேசியச் சூழ்நிலையையும், சமய எழுச்சியையும் தம் உணர்வில் வெளிப்படுத்தினர். பாரதிதாசன் தாம் கண்ட புறநிலைகளைத் தாம் உணர்ந்த அகநிலையொடு பொருத்தி ஏற்றத் தாழ்வுகளைச் சாடினர். பாரதியார் பாடியது சமயம், அரசியல். பாரதிதாசன் பாடியது இயற்கை, குமுகாயம். இயற்கை சமயத்திற்கும், குமுகாயம் அரசியலுக்கும் அடிப்படை. இவ்விரு பாவலர்களும் இவ்விரு நிலைகளைப் பற்றிப் பாடினும் பாரதிதாசன் பாரதியினும் விஞ்சிய பாவலன். பாரதியையே அறிமுகப்படுத்தியவர் பாரதிதாசன்தான். கல்கி கூட்டங்கள் பாரதியை ஒரு பாவலர் என்றே ஒப்புக் கொள்ளாமல் புறக்கணிப்பாக இருந்தபொழுது, 'பாரதி ஓர் உலகப் பாவலன்' என்று தமிழால் பாடிய அப்பாவலனுக்கு உண்மையான நன்றி காட்டினர் பாரதிதாசன். அதன்பின் திறத்தால் உணரப்படாமல் இருந்த பாரதியாரைப் பார்ப்பனர் தம் இனத்தால் உணர்ந்து பாராட்டினர்; போற்றினர்; பனிமலைமேல் கொண்டுபோய் வைத்துச் சீனனை அச்சுறுத்தினர். தமிழறியா வடநாட்டாரும் தமிழறியும் பெருமாள்களாக நடமாடித்திரியும் இங்குள்ள பார்ப்பனர்களின் பேச்சைக் கேட்டுப் பாரதியை விண்ணுக்குத் தூக்கினர். தூக்கினதோடன்றிப், 'பாரதிக்குப் பின் தமிழகத்தில் எவனும் புலவனில்லை' என்று சாக்கத்து கத்தித் திரிகின்றனர். மண்டைப் புழுநெளியும் இத் தான்தோன்றியர்தம் ஓலம் தமிழ்நாட்டிலிருந்து வெளிவருவதே நமக்கு இழுக்கு. எனவே இச்சூழலில் பாரதிக்கு இனத்தால்

கொடுக்கப் பெற்ற அப்பெருமை பாரதிதாசனுக்குத் திறத்தால் கொடுக் கப் பெறுதல் வேண்டும் என்று தமிழக அரசைப் பல்லாற்றானும் வேண்டிக் கூறிக்கொள்கின்றோம்.

இனி, தூங்கிக் கிடந்த தமிழர்தம் வாழ்வு நிலை நோக்கி, ஏங்கிக் கிடந்த பாவலர்தம் பெரிய குடும்பம், இக்கால் வறுமை நிலை தாங்கிக் கிடக்கின்றது. கடன் சுமை தாளாது துடிக்கின்ற அவர் தலைமகன். தன் ஒரே மகனின் துவள்கின்ற உடல் தாளாது பெருமூச்செறியும் அம் முதிய தாய் — பாவேந்தரின் இல்லத்தரசி! அவரின் குன்றிய நிலைக்கு ஏங்கிக் கண்ணீர் வடிக்கின்ற மூன்று பெண்கள்! தமிழ் நாட்டின் குடும்பங்களுக்கெல்லாம் விளக்கேற்றி வைத்த அத் தண்டமிழ்ப் பாவ லனின் குடும்பம், இன்று இருண்ட வீட்டில் அடைக்கலன் புகுந்து கிடக்கின்றது. அரிமாவென அவர் உலாவிய அவ்வீடு உண்மையி லேயே ஒளியிழந்து கிடக்கின்றது. தமிழ் பாடிய அப் பாவலனின் பெயரப் பிள்ளைகள் வற்றிய தோலும், வதங்கிய கன்னமும், வாடிய வயிறுமாக இன்று அவலம் பாடித்திரிகின்றனர். ஆருக்கும் பணி யாத நெஞ்சுரனும், அவலத்திற்குத் துவளாத தமிழ்ச் செம்மாப்பும் கொண்ட திருமகன் — அரிமாவுக்குப் பிறந்த வேங்கை — மன்னர் மன்னன் இன்று துயரப் புயலால் துவட்டி யெடுக்கப்பெற்ற பழைய ஓலைப் பாயைப் போல் ஒளி மழுங்கிக் கிடக்கின்றார். தமிழ் வளர்த்த குடும்பம் இன்று தமிழர்களால் புரக்கப் பெறாது வறுமைத்தீயால் வாடி யிருக்கின்றது. பீடு நிரம்பிய அக்குடும்பம் இன்று பெருமை குன்றிக் கிடக்கின்றது.

இந்நிலையில் தமிழர்களாகிய நாம் செய்யக் கடவது என்ன? பாரதிதாசன் மன்றங்கள் நினைவு விழா கொண்டாடுகின்றன. பாரதி தாசன் எங்கள் புலவன்; பாவலர்க்கு வேந்தன் என்று பன்னிப் பன் னிப் பேசுகின்றோம் நாம். தமிழ் நிலம் உலகிலேயே நன்றி காட்டும் நிலம் என்ற நிலை போய், நன்றி மறந்த நிலம் என்று கீழ்மைப்பட்டு விட்டது. தமிழர் நன்றியுள்ளவர் என்ற நிலை போய், நன்றி கொன் றவர் என்ற நிலையேற்பட்டு விட்டது. நன்றி கொன்றார்க்கு உய் வுண்டா? இல்லை என்கிறது தமிழ் மறை. இங்கிருக்கும் நான்கு கோடித் தமிழர்களில் ஒரு நாற்பதாயிரம் தமிழர்களாவது அவர் பாடல் களைப் படித்திருக்க மாட்டார்களா? அப்பாடல்களின் உள்ளுணர்வால் தாக்கப் பெற்றிருக்கமாட்டார்களா? அப்பாடல்களால் தங்கள் உள்

ளங்களில் மறைந்து கிடந்த தமிழுணர்வு கிண்டப் பெற்றுப் புத்துணர்வு பெற்றிருக்க மாட்டார்களா? அவ்வாறு புத்துணர்வு பெற்றுப் புது வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க மாட்டார்களா? அவர்களை நோக்கி நாம் கேட்கின்றோம். உங்களுக்குப் புத்துணர்வு ஊட்டிய அப் பாவேந்தனுக்கு — உங்கள் மண்ணுள்ளத்தைப் பொன்னுள்ளம் ஆக்கிய புலவனுக்கு — சாம்பிக் கிடந்த தமிழ்க்குமுகாயத்தை வீறு கொண்டெழச் செய்த அப் பாப்புலிக்கு — "உரம் பெய்த செந்தமிழ்க்கு ஒன்றிங்கு நேர்ந்ததென உரைக்கக் கேட்டு, நரம்பெல்லாம் இரும்பாக்கி நனவெல்லாம் உணர்வாக்கி" வைத்த, அப்பாட்டு மறவனுக்கு — "சிறுத்தையே வெளியில் வா! எலி என உன்னை இகழ்ந்தவர் நடுங்கப், புலி எனச் செயல் செய்யப் புறப்படு வெளியில்! சிங்க இளைஞனே! திருப்பு முகம்! திறவிழி!... மொழிப் பற்றெங்கே? விழிப்புற்றெழுக!" என்று தட்டி யெழுப்பிய தானைத் தலைவனுக்கு — நீங்கள் செய்யப் போவது என்ன? உங்களில் ஆளுக்கு ஒருவர் ஓர் உருபா தந்து உதவினும் புயலிற்பட்ட கலம் போலாகும் அப் புலவனின் குடும்பம், வயலிற்பட்ட மழையென வளம் பொங்கி எழுமே! தாக்கும் வறுமையால் விடும் அவர் தம் ஏக்கப் பெருமூச்சுக்குத் தமிழினம் ஆற்றும் தலையாய கடமையன்றோ இது ?

செல்வம் மிகுந்த நாடு தமிழ்நாடு. பாண்டியன் அளந்த முத்து, சேரன் நிறுத்த யானை மருப்பு, சோழன் அமைத்த நெற்களஞ்சியம் என்றெல்லாம் இலக்கியம் பாடிய தமிழ்ப் புலவர் வழிவந்த இத் தண்டமிழ்ப் பாவலர்க்கு நாம் கடமை செய்யத் தவறினோம். பெண்டிர் நலம் பற்றித் தூது, உலா, மடல், வாயில் என்று பலப்பல காமக் கழி நிலை நூல்களைப் பாடுவதையே தம் தொழிலாகக் கொண்ட இழிநிலைப் பாவலர்கள் போல் அன்றி, குமுகாயப் புரட்சிக்கே வித்திட்ட இப் புதுமைப் புலவனுக்கு, தமிழ் அன்னைக்குத் தலைமகனாகி அளப்பரிய தொண்டாற்றிய இப்புலவர் மணிக்கு — நாம் இதையும் செய்யாமற் போவோமானால் நமக்கு எதிர்காலத்தே வரும் இழிவைத் தாங்கிக் கொள்ள நெஞ்சு போதாது.

ஆகவே, அரசினர் பாடாற்றும் வினைகளை அவர் புறத்தே விடுத்து, நாம் செய்து முடிக்கின்ற வினையாற்றலில் நாட்டத்தை வைப்போம். ஆங்காங்கே உள்ள தமிழ்க் கழகங்கள், மன்றங்கள், கல்வியமைப்புகள், புலவர் குழுக்கள், தமிழன்பர்கள் எல்லாரும் தம் தம் சார்

பில் தங்களால் இயன்ற அளவு பொருள் திரட்டிப் புதுவையில் உழன்று கொண்டிருக்கும் பாவேந்தர் தம் குடும்பத்திற்கு விடுத்தல் வேண்டும் என்று பல்லாற்றானும் வேண்டிக் கொள்கின்றோம். தாங்கள் தொகுக்கின்ற பொருளை **தமிழ்த்திரு. பழநியம்மாள், மேற்பார்வை மன்னர் மன்னன், 95, பெருமாள்கோவில் தெரு, புதுவை-1** என்ற முகவரிக்கு விடுத்துவிட்டு, அத்தொகுப்புப் பட்டியலைத் தென்மொழிக்கு விடுக்க வேண்டுகின்றோம், பட்டியல் தென்மொழியில் வரும். அனுப்பப் பெறுகையில் **இது பாவேந்தருக்குச் செய்யும் நன்றிக்கடன்; தென்மொழி அன்பர்கள் சார்பில் விடுக்கப் பெற்றது.''** என்றும் குறிப்பிடும்படி கேட்டுக் கொள்கின்றோம். ஒவ்வொரு நாளும் எத்தனையோ துறைகளில் எத்தனையோ உருபாக்களைச் செலவு செய்கின்றோம். இவ்வழி நாம் அளவில் ஒவ்வொருவரும் குறைந்தது ஓர் உருபா செலவிடுவதால் நம் நிலைக்குக் குறைவும் ஏற்பட்டுவிடாது; இழுக்கும் அன்று. மாறாக நம் தலைமுறையில் வாழ்ந்த தலைசிறந்த பாவலர் ஒருவர்க்கு நாமும் நன்றி காட்டினோம் என்ற மன நிறைவும், பெருமிதமும் ஏற்படும் என்பது உண்மை.

தென்மொழிச் சார்பில் அன்பர்கள் இதுபோன்ற அறக்கொடைகள் வழங்க வேண்டிக்கொள்வது இது மூன்றாவது முறை. பொருளியல் தொல்லை மிகுந்த இக்காலத்தும் எந்தமிழ் அன்பர்களை இவ்வாறு தூண்டுவது, தங்களுக்குள்ள கடமையுணர்வுகளில் தாங்கள் ஒரு சிறு அளவிலாகிலும் ஈடுபாடு கொள்ளுதல் வேண்டும் என்ற அறவுணர்வு பற்றியே. இவ்வேண்டுகோளுக்கு உளமும் உழைப்பும் நல்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன், இக்கடமைச் சுமையை உங்கள் மீது சுமத்தியமைக்கு நம்மைப் பொறுத்தருளுமாறும் வேண்டிக் கொள்ளுகின்றோம்.

— பெருஞ்சித்திரன்.

---

அட்டை விளக்கம் :-

வெண்ணிலாவும் வானும் போலே
வீரனும் கூர் வாளும் போலே
வண்ணப் பூவும் மணமும் போலே
மகர யாழும் இசையும் போலே
கண்ணும் ஒளியும் போலே எனது
கன்னல் தமிழும் நானும் அல்லவோ!''

# பொய்யிலாப் புலவன் புகழ் வாழியவே!

துரை மாணிக்கம்.

தம்மனை நினையான்; தமிழ்நினைத் திருந்தான்;
தம்மக்கள் பேணுன்; தமிழைப் பேணினுன்!
தம்பொருள் காவான்; தமிழ்காத் திருந்தான்!
தம்நலம் விழையான்; தமிழ்நலம் விழைந்தான்!
தம்துயர் போக்கான்; தமிழ்த்துயர்க் கெழுந்தான்!
மும்மைப் பொழுதும் முத்தமிழ் மொழிக்கெனத்
தம்மைத் தந்தான்; தம்வாழ் விழந்தான்!
தன்னேர் ஆவி தமிழுக் களித்த
மன்னன்! பாவலன்! மாத்தமிழ் மறவன்!
பாடலுக் கொருவன்! பைந்தமிழ் வென்றி!
கேடுறுந் தமிழ்க்குக் கேடயம்! நெடுவாள்!
கூனற் பகைமுன் குமுறும் எரிமலை!
வேனில் வெங்கதிர்! வீசும் கொடும்புயல்!
புதுவையி னின்று பாடிய பூங்குயில்!
எதுபைந் தமிழுக் கேற்றம் விளைக்கும்
என்றே கருதி இசைத்த பேரியாழ்!
குன்று நாவும் கொதித்த நெஞ்சுமா
வானமும் அதிர முழங்கிய வல்லிடி!
கான வேங்கை! கனல்தெறி களிறு!
இமைநடுங் காமல் இரவும் பகலும்
நமையும் நாட்டையும் காத்த காவலன்!
அன்னேன் நல்லுடல் அழிந்த தாயினும்
என்றும் வாழ்ந்தது வாழ்ந்தது இவன் உயிர்!
வையப் பெரும்பெயர் வழிவழிக் கொண்ட
பொய்யிலாப் புலவன் புகழ்வா ழியவே!

# பாரதிதாசனுக்குப் பா மடல்!

## துரை மாணிக்கம்

(மூன்று ஆண்டுகளுக்கு முன் பாவேந்தர் நம்மை — அவர் பாவுணர்வால் கட்டியாண்ட இத் தமிழகத்தை — விட்டுப் பிரிந்து சென்றார். அவர் சென்றபின் உள்ள தமிழகத்தைப் பற்றி யறிவித்து, எதிர்காலத் தமிழகத்தைப் பற்றி உறுதிகூறி எழுதியது இப்பாட்டு மடல்! அவர் எங்கிருந்தாலும் இம் மடல் அவருக்குப் போய்ச் சேரட்டும். இல்லை; அவர் காற்றோடு, கதிரொடு, விண்ணோடு, உடுக்களொடு, ஊற்றோடு, மலர்களொடு – இன்னும் இயற்கையில் உள்ள பல்கோடிக் கணக்கான அணுக்களொடு போய்க் கலந்திருப்பினும் அல்லது இவ்வுலகத் தமிழர்தம் உள்ளங்களில் ஊடாடிக் கொண்டிருக்கும் உணர்வொடு உணர்வாகக் கலந்திருப்பினும் அங்கெல்லாம் இப்பாடலின் உணர்வலைகள் பட்டுத் தெறிக்கட்டும்! ஓலமிடட்டும்!)

அன்புள்ள பாவேந்தே! வணக்கம். இங்கே
அனைவருமே நலமெனினும், ஐயா, நீங்கள்
தென்புதுவைத் திருமண்ணை — தமிழகத்தைத்
தீந்தமிழர் தமைப் பிரிந்த நாளி னின்று
தென்பில்லை உளத்தினிலே! ஊக்க மில்லை;
திருவளர்ந்த தமிழகத்தில் செழிப்பு மில்லை;
அன்பில்லை தமிழர்க்குள்; ஆர்வ மில்லை;
அனைத்துலக வாழ்க்கையிலும் அமைதி இல்லை!

முன்பிருந்த நிலையறிவீர்; தமிழர் அன்றே
மூளிகளாய் நின்றதுவும் தெரிந்தி ருப்பீர்;
என்பிருந்த தோல் உருவாய்ச் சதை, நார் இன்றி
எள்ளளவும் மானமின்றிச் சுரணை இன்றித்
தன் பிறந்த நாடு, மொழி, மக்கள் என்ற
தன்னுணர்வு சிறிதுமின்றித் தமிழர் வாழும்
துன்பிருந்த சூழ்நிலையை அறிந்தி ருப்பீர்!
துளியேதும் மாற்றமில்லை; நிலைஅவ் வாறே!

சோற்றுக்கு மடிவிரிக்கும் புலவர் கூட்டம்!
சுரண்டுகின்ற வாணிகர்கள்! அடிக்கும் மென்மைக்
காற்றுக்கும் தாங்காத குடில்வாழ் மக்கள்!
கண்ணீர்க்குப் பஞ்சமில்லை; பழம் விளக்கு
மாற்றுக்குக் குஞ்சமெனப் பதவி, பட்டம்!
பகற்கொள்ளை! கலைக்கொலைகள்! பெருகும் மக்கட்
பேற்றுக்குக் குறைவில்லை; சவலை, நோஞ்சற்
பிள்ளைகளோ கணக்கில்லை! உணவுப் பஞ்சம்!

உண்மைக்கு மதிப்பில்லை; பொய்யு ரைக்கும்
உலுத்தஅர சியல்வாழ்க்கை; நீங்கள் மெச்சும்
பெண்மைக்குச் சிறப்பில்லை; பிறழ்ந்த தாண்மை!
பேயாக அலைந்துபணந் திரட்டும் கீழ்மை!
திண்மையில்லை உள்ளத்தில்! தொண்டிங் கில்லை;
திறமுமில்லை; கல்வியிலும் ஆழ மில்லை.
அண்மையிலே அமைச்சரவை மாறிற் றிங்கே!
அதன் விளைவை அடிக்கடிநான் அறிவிக் கின்றேன்.

வரிமேன்மேல் பெருகிற்று; நலத்தைக் காணோம்.
வாய்நிறையப் பேசுகின்றார்; செயலைக் காணோம்.
செரிமானக் குறைவுமுண்டு செல்வர் பாங்கில்!
சிக்கனஞ்செய் வார்பெண்கள் ஆடை தன்னில்!
அரிமாப்போல் முழங்கினிரே 'இந்திக்' காக!
அந்நிலைதான் இன்றுவரை. ஆனால் ஐயா,
வரிமாப் போர்; களிற்றுப்போர்! இரண்டாண் டின்முன்
வாய்த்ததொரு மாணவப்போர்! தமிழ்மொ ழிப்போர்!

'தமிழியக்கம்' தந்தவரே! தமிழைக் காக்கத்
தமிழகத்து மாணவர்கள் எழுந்த காட்சி
சிமிழ்க்காத பெருமுனைப்பு! அடடா! அற்றைச்
சேரர்சோ ழப்படையோ பாண்டி நாட்டின்
குமிழ்த்தெழுந்த போர்முழக்கோ என்னு மாறு
கூடியதும் அலைத்ததுவும் தமிழைக் காக்க
அமிழ்தான உயிரிழந்த மாட்சி தானும்
அழியாத வரலாறு! சலியாக் காதை!

வெடிக்கின்ற துயராகத் தமிழ கத்தின்
வீழ்ச்சி பல இருந்தாலும், இக்கா லத்துப்
படிக்கின்ற மாணவர்க்குத் தமிழ்மேல் நாட்டம்
படிப்படியாய் மிகுந்துவரக் காண்கின் றேன்,நான்!
துடிக்கின்ற இளமையிலே அறிவு மேய்ச்சல்
தொடங்கிவிட்டால், செந்தமிழ்ப்பால் அருந்திவிட்டால்
அடிக்கின்ற புயல்காற்றும் ஒடுங்கிப் போகும்!
அடுத்துவரும் தலைமுறையும் நிமிர்ந்து நிற்கும்!

மெய்யாக உரைக்கின்றேன்; ஐயா, உங்கள்
மேனாளின் பேருழைப்பு — தமிழ்வே ளாண்மை
பொய்யாகப் போகாது; முளைத்துக் காய்த்துப்
புடைதிரண்டு கனிந்துபயன் தருதல் உண்மை !
உய்யாமல் நின்றிருந்த தமிழர் கூட்டம்
உணர்ந்தெழுந்து சிறப்பதுவும், இதுநாள் மட்டும்
எய்யாமல் இருந்தபெரும் புகழ் அனைத்தும்
எய்திடவாழ்ந் திருப்பதுவும் பெருத்த உண்மை!

இக்காலத் தமிழகத்தில் இருக்கும் தீமை
எதிர்காலத் தமிழகத்தில் இருக்கா தென்பேன்!
திக்காலுக் கோரிருவர் என்றில் லாமல்
திரண்டிருப்பார் தமிழ்த்தலைவர்! தமிழர் கூட்டம்
தக்காரின் மொழி கேட்கும்; தகவே செய்யும்!
தம்கடமை அறமுடிக்கும்; தமிழைக் காக்கும் !
அக்காலிற் குலப்பிரிவு, சமயக் கூச்சல்,
அடிதடிகள், அருவருப்பு அறவே நீங்கும்!

தமிழ்ப் பண்பு தலையெடுக்கும்; ஒடுங்கும் கீழ்மை!
தண்டமிழ்ல் பெருங்கலைகள் ஊற்றெ டுக்கும்.
உமிழ்தக்க தீயவரும் பிழை உணர்ந்தே
உயர்ந்தோரும் பாராட்டத் திருந்து வார்கள் !
கமழ்பெருக்கும் தமிழ்மணமிவ் வுலக மெல்லாம்!
கன்னியர்க்கும் இளையோர்க்கும் மெய்ம்மைக் காதல்
அமிழ்தூற்றுப் போல் பெருகும்; பெருகும் வாய்மை!
அனைத்துலகும் ஒன்றென்னும் நினைவுண் டாகும்.

பொருள் மேய்ச்சல் விலகிப்போம்; பொய்செத் துப்போம்;
புத்துலகத் தொடர்புவரும்; அறிவு வீறும்!
இருள் விலகும்; ஒளி பிறக்கும் தமிழர் வாழ்வில்!
ஏமாற்று வெறும் பேச்சு தொலைந்து போகும்.
அருள் மலரும்; அன்பூறும் செயலில் பேச்சில்!
அனைவருமிங் கொருநிறையென் றறம்பி றக்கும்.
மருள்வாழ்க்கை போயொடுங்கும். வறுமை மாயும்.
மாளாத இலக்கியங்கள் சுரப்பெ டுக்கும் !

முடிவாக ஒருசெய்தி! தமிழர் வாழ
முழுவாழ்வும் உழைத்தீர்கள்; மனைவி மக்கள்
விடிவாக ஒருநலமும் தேட வில்லை;
வினைவின்றி அவரின்று வாடு கின்றார்.
அடிவாழைக் கன்றுக்கிங் காக்க மில்லை!
அவர்க்காகக் கண்ணீர்விட் டழுகின் றேன் நான்.
மடியாத தமிழுணர்வே! மலையா நெஞ்சே!
மாளாத புகழ்க்குன்றே ! வணங்கு கின்றேன் !

# பாவேந்தர் குடும்பம் அன்றும் இன்றும்!

— சு. மன்னர்மன்னன் (பாவேந்தர் திருமகனார்)

"அம்மா!"

ஆயிரமாயிரம் பொருளை உணர்த்தும் இத் தமிழ்ச்சொல்லோடு பாவேந்தரின் உயிர் பிரிந்து ஆண்டுகள் மூன்று ஓடிவிட்டன.

அன்றும் இன்றும் உள்ள நிலையைக் கூறும்படி ஏனோ இப்போது எனக்கு அன்புக் கட்டளையிட்டிருக்கிறார் தென்மொழியார்!

பரந்து கிடக்கும் இல்லத்தின் முற்றத்தில் சாய்வு நாற்காலியில் தமிழ் மணந்து கிடக்கும் பாவேந்தர் அமர்ந்திருப்பார். திறந்து கிடக்கும் தெருக்கதவு எப்போதும்; விரிந்து கிடக்கும் தமிழகத்தின் மக்கள் வருவர்.

வந்தவர் "ஐயா!" என்றதும், "வாங்க, எந்த ஊர்?" என்பார் பாவலர்.

சில சொற்கள்...பின்...... "பழநியம்மா! இவர்கட்குச் சாப்பாடு!" என்று கட்டளை போடுவார்.

வருவார் போவார்க்குரிய வகைவகையான ஏற்பாடுகள் வீட்டில் உண்டு!

இக்காட்சி "அன்று" என்றாகிவிட்டது. இன்று ......?

இல்லம் இருகூறாக்கப்பட்டுத் தலைவாயில் பகுதி வேறொருவர் குடியிருப்பாக்கப்பட்டது. மேற்புறம் அமைந்த சிறுவாயிலின் வழியே தொல்லைப்பட்டு நுழைகிறார்கள் அன்பர்கள்.

ஏறெனப் பாவலர் உலவிய இடங்கள் ஒளிமங்கி அடங்கியிருக்கின்றன. வந்த நண்பர்கள், தமிழர்க்கு ஒளிவிளக்கு அளித்த இந்த இல்லம் இன்று இருள் கவ்விறாற் போற் காண்கிறதே! ஏன் என வினவுகின்றனர்.

பாவேந்தரின் பல்வேறு நிலையான நிழற்படங்கள் அங்கொன்று இங்கொன்றாய்க் காட்சியளிக்கின்றன. கையெழுத்துப்படிகள் காலச் சுழலில் மறைந்தோ மடிந்தோ போகும்படியாய் வைக்கப் பெற்றுள்ளன.

உரையாடல் தொடங்குகின்றது.

"எங்கே தங்கியிருக்கின்றீர்கள்" என்று நான் கேட்கின்றேன், நண்பர்களை நோக்கி!

'இன்று' – இதுதான் நிலை.

"ஏன் இப்படி ?" தமிழன்பர்கள் உரிமையோடு வினவ, விளக்கம் தரவேண்டியது என் கடமையாகின்றது.

பாவேந்தரின் சாகாத இலக்கியங்கள் பலவற்றைப் பதிப்பகத்தாரிடம் விற்ற மிகக் குறைந்த தொகையின் ஒரு பகுதியைச் செலுத்தி முதலில் வாங்கப்பெற்றது இந்த வீடு– 1945-இல்!

1956-ஆம் ஆண்டு வரை இதனைச் சீராக்கிக் கட்டி முடிக்கப் பாவலர் செலவிட்ட தொகை பல்லாயிரம்.

அச்சகம் நிறுவினர்; கிழமை ஏடு நடத்தினர்; எனக்கும் என் தமக்கை, தங்கையர்க்கும் திருமணம் நடத்தினர்.

அச்சகத்திலும் சரி, கிழமை ஏட்டிலும் சரி, எதிர் நீச்சல் போக்கு– எனவே முதலீட்டுக்குக் கேடு –

இவற்றிற்கிடையில் வருவார் போவார்க்கு விருந்தோம்பலும், 'வாழ வகையற்றேன்' என்று கூறுவார்க்கு முதல் தந்து இழந்ததும் ஏராளம். தொடர்ச்சியாக வருவாய் வரும் நேரம், கொள்கை முரண்பாடு தோன்றிவிட்டால், கைவிட்டுப் போவதுதான் உண்டு கொள்கை விட்டுப் போனதில்லை. 'கணக்குப் போட்ட அரசியல்' பாவலர்க்குப் பிடிக்காத செய்தி. 'நாளைக்கு வேண்டுமே' என்ற கவலை அவர் பட்டதில்லை.

இத்தனைக்கும் மேலாக —

தாம் படைத்த அன்னத்தையும் வேலனையும் ஆத்தாக் கிழவியையும் வீரப்பனையும் திரைப்படத்திலே நடமாடவிடத் திட்டம்போட்டார்.

முடிவு ?

நரிக்கண்ணன் வெற்றி பெற்றான்! சூழ்ச்சிக்காரர் நடுவிலே சூதறியாத பாவேந்தர் நிழற்படமாகிவிட்டார்...

'திரைப்படம் முடிவுறாமல் நான் வீடு திரும்ப முடியுமா?' என்று கேட்டுவிட்டுத் தம் ஒரே சொத்தான வீட்டை ஈட்டுப் பொருளாக வைத்துப் பெற்றார் பதினெட்டாயிரம் உருபா; 1963-ஆம் ஆண்டில் பெற்ற இந்தத் தொகைக்கு இதுவரை நிலுவையாகி விட்ட வட்டி

மட்டும் உருபா ஆறுயிரம். இதற்கு மேலாக மூவர் போட்ட வழக்கு. அவர்கட்கும் தந்தாக வேண்டும், பெருந்தொகை!

ஏறத்தாழ அரை நூறுயிரம் உருபா இருந்தால் இந்த வீடு ஏலம் போவது தடுக்கப்படும். இருள் அகற்றப்படும்!

இன்பாடல்கள் பிறந்த இடம். "தமக்கொரு தீமை என்று நற்றமிழர் எனை அழைத்திடில் தாவி, இமைப்பினில் ஓடி, தரக்கடவேன் நான் இனிதாம் என் ஆவி!" என்று சூள் உரைத்த தலைமகன் உலவிய இடம்.

இதனால் மட்டும் சிறப்புடையதன்று. மற்றொன்றும் கூறுவேன்:

தமிழ்ப் புலவர் ஒருவர் வந்தார். நொந்த நிலையினர். உள்ளமும் சிறிது கலங்கியவர். அவர் காலைக்கடனாற்றப் போனார். தலையில் இடித்துவிட்டது சுற்றுச் சுவர். அடுத்த நாளில் அமைப்பே முழுதாக மாற்றப்பட்டது. வந்தவர் எவரும் குளிக்க, வேறு கடன் கழிக்கத் தவிப்பது கூடாது. இதற்காகக் கட்டிலறையே குளியல் அறையாக மாற்றப்பட்டது. எத்தனையோ இடர்ப்பாடுகள் குடும்பத்தாருக்கு. அவற்றைப் பற்றி எள்ளத்தனையும் பாவேந்தர் கவலைப்பட்டதில்லை.

"நான் போகும் இடத்திலெல்லாம் என்னை எப்படி வரவேற்கிறார்கள். அந்த அன்புக்கு நான் கைம்மாறு செய்யமுடியுமா? ஏதோ என் வீட்டிற்கு வருகிறவர்களை ஓரளவாவது நான் வரவேற்று நலம் கொடுக்க வேண்டாமா ?" என்பார் பாவேந்தர். இதற்காக நாங்கள் பல நாள் பட்டினியிருந்திருக்கிறோம். பட்டபாடு கொஞ்சமன்று. நான் கூற என்ன உண்டு ?

'அம்மா' என்றன்றோ உயிர்நீத்தார்? அத் தமிழ் அன்னை இருக்கிறாள்!

தமிழ் அன்னையின் மக்கள் இருக்கின்றார்கள். அரியணையில் அன்னையை அமர்த்திய அரசு இருக்கின்றது!

தமிழர்கள் வாழ்கின்றார்கள்! அவர்கள் கடமை தவறமாட்டார்கள். எனவே நான் பதறமாட்டேன். ⚬

---

## கவனிக்க.

தென்மொழியின் கருத்துரைகளுக்கும் கட்டுரைகளுக்கும் பாவாணர் அவர்களுக்கும் எவ்வகைத் தொடர்புமில்லை தென்மொழியில் வெளிவரும் பாவாணரவர்களின் ஆங்கிலக் கட்டுரையாக்கம் உறுப்பாசிரியர் தங்கப்பா அவர்களால் மொழிபெயர்க்கப்படுவது,

(- ஆசிரியர்)

# ஓங்கட்டும் பாரதிதாசன் புகழ்!

பாரதி தாசன் பைந்தமிழ்ப் புலவன்;
தமிழையும் தமிழர் விடுதலை வாழ்வையும்
உயிராய்க் கொண்டவன்; உண்மை வேட்டவன்.
ஆரிய நரிகள் அடுத்துக் கெடுக்கவும்
இந்தி ஓநாய் வந்து நுழையவும்
போலித் தமிழ்ச்சிறு பன்றிகள் பிருண்டவும்
அலைப்புறும் தமிழுக்கு அருந்துணை ஆயினன்.
மூச்சால், பேச்சால், எழுத்தால். செயலால்
ஒய்வில் லாமல் தமிழுக்கு உழைத்தான்,
அஞ்சா நெஞ்சில் அரிமா அனையவன்;
பாட்டின் உயர்வில் பண்டையோர் நிகர்த்தான்
இயற்கை உணர்வில் இணையி லாதவன்;
காதல் நுட்பம் கழறிய கலைஞன்;
வரட்சி காணுக் கற்பனை ஊற்றினன்;
புரட்சி நெஞ்சினன்; புதுமை நோக்கினன்.
தமிழக விடுதலை வேட்டு நாடொறும்
குமுறியோன்; ஆயினும் குறுகியோன் அல்லன்!
உலக ஒருமைப் பாடு விழைந்தவன்!
மானம், உணர்ச்சி, அறிவெனும் மூன்றையும்
வடவர்கா லடியில் அடகு வைத்த
அடிமையர் நடத்திய கெடுதலை ஆட்சியில்
இத்தனை நாளும் அன்னோன் தகுபுகழ்
பொய்த்திறம் பேணிய புல்லர்க்கும் தாழ்ந்தது!
குடத்துள் இட்ட விளக்கினும் குறைந்தது!
இன்றோ,
தமிழ்நலம் பேணும்நல் தமிழர் ஆட்சி
தமிழக மன்றில் முழங்கிய தென்றனர்.
ஈங்கிதும் உண்மை ஆயின்
ஓங்கட்டும் பாரதி தாசன் புகழே!

---

**ம. இலெ. தங்கப்பா.**

– மகிபை பாவிசைக்கோ.

# அவர் அறியாதது !

வேங்கைத் திறலும் வெங்கரியின்
வலிவும் தமிழர் உடற்கேற்றும்
பாங்கில் புரட்சிக் கனற்பாக்கள்
பலவாய் யாத்தாய் பாவேந்தே!
பாங்கில், அகவல் கலிவஞ்சிப்
பயனில் உய்வார் என்றிருக்கத்
தூங்கிக் கிடந்தே பார்நகைக்கத்
துய்ப்பார் மடமை காண்கிலையோ!

வல்வில் வேந்தர் கணைத்தொடர்போல்
வளரும் இளைஞர் யாவருமே
கல்விப் பயனைப் பெறுகவெனக்
கழறிச் சென்றாய் பாவேந்தே !
கல்விப் பயனால் மாணவர்கள்
கடைத்தே றிடுவார் என்றிருக்கப்
பல்லாற் றானும் பொருள் தொகுக்கப்
பதைப்புற் றிருப்பார் காண்கிலையோ !

ஆர்க்கும் முகிலோ மலைவீழ்வோ
அலைக்குங் கடலோ எனவியக்கப்
போர்ப்பண் பாடி இளையவர்க்கே
புதுத்தெம் பளித்தாய் பாவேந்தே !
போர்ப்பண் பாடித் தமிழிளையோர்
பொடிப்பார் பகையை என்றிருக்க
வேர்க்கும் உடலால் பகையெதிரில்
விதிர்ப்புற் றிழிவார் காண்கிலையோ !

வண்டோ சுரும்பர் அஞ்சிறையோ
ஞிமிறோ தேனோ எனத்திரிந்து
பெண்டிர் உரிமை நிலைநாட்டிப்
பறந்தாய் புரட்சிப் பாவேந்தே!
பெண்டிர் உரிமை நிலைத்ததனால்
பெரும்பே றடைவர் என்றிருக்க
மண்டும் புதுநா கரிகமெனும்
மயக்கில் வீழ்வார் அறிகிலையோ ?

குயிலோ வானம் பாடி, இசைக்
குரீயோ என்னக் குரலெடுத்துத்
துயிலும் புலவர் எழுகவெனத்
தமிழ்ப்பண் ணிசைத்தாய் பாவேந்தே!
துயிலும் புலவர் துடித்தெழுந்தே
துணைசெய் திடுவார் என்றிருக்க
அயலார் மொழியின் நயம்பேசி
அழுவார் நாளும் காண்கிலேயோ?

துடியோ பறையோ கிம்புரியோ
துந்துபி முழக்கோ எனுங்குரலில்
விடியும் தமிழர் வாழ்வெனவே
விளம்பிச் சென்ருய் பாவேந்தே!
விடியும் தமிழர் வாழ்வெனவே
விழைவார் தம்மின் நெஞ்சமெலாம்
ஒடியும் வகையில் அடிமையராய்
ஒடுங்கிக் கிடப்பார் காண்கிலேயோ!

'ஆடிப்' புயலின், நளிமழையின்
அருவிப் போக்கின் கடுவிரைவில்
பாடிக் குவித்துன் பரம்பரைக்கே
பெருந்தொண் டிழைத்தாய் பாவேந்தே!
பாடிக் களித்துன் பரம்பரையர்
பணியைத் தொடர்வார் என்றிருக்கக்
கூடிக் குவிந்துன் கல்லறையைக்
கும்பிட் டழுவார் காண்கிலேயோ!

குழலோ முழவோ கிண்கிணியோ
குளிர்செய் யாழோ எனப்பாடி
உழலும் மாந்தர் நிலையுயர
உழைத்துச் சென்ருய் பாவேந்தே!
உழலும் மாந்தர் பலர் இந்நாள்
உயர்ந்தார் எனினும் நின்குடும்பம்
தழலென் வறுமை வயப்படலைத்
தவிர்ப்பார் இலரே காண்கிலேயோ!

# சஞ்சீவி பர்வதத்தின் சாரல்:
## ஒரு திறனாய்வுக் கண்ணோட்டம்.

**(A Critical Review)**

க. ப. அருணாசலம், பி. ஒ. எல்.
தமிழ் ஆராய்ச்சித் துறை, திருவனந்தபுரம்.

கலைஞர்களால் செய்யப்பட்டது என்பதாலேயே ஒன்றுகலையாகி விடாது. கலைக்குரிய கூறுகள் அதனுள் நிறைந்து, காணுவோரின் முருகுணர்ச்சிக்கு (Aesthetic Pleasure) விருந்தாக அமையும்போது தான் அது கலையாகிறது. பாவலர்களால் பாடப்பெற்றது என்ப தாலேயே ஒரு சொற்கோவை பாட்டு எனக் கொள்ளப்படுவதில்லை. பாட்டுக்குரிய கூறுகள் நிறைந்து படிப்போரின் முருகுணர்ச்சியைத் தூண்டுவதே பாட்டாகும். ஒரு பாட்டு ஏன் சுவைக்கிறது? எப்படிச் சுவைக்கிறது? என்பதனை அறிவுக் கண்கொண்டு ஆய்ந்து நிறுவு வதே திறனாய்வின் நோக்கம். அந்நோக்கை அடிப்படையாகக் கொண்டு, பாவேந்தர் பாரதிதாசனின் 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' என்ற பாவியம் இக்கட்டுரையில் ஆராயப்படுகிறது. பாவலர் இப் பாவியம் இயற்றி 28 ஆண்டுகள் ஓடிவிட்டன. என்றாலும் அவர் இப் பாவியத்தின் மூலம் அமைக்க விரும்பிய சீர்திருத்தக் குமுகாயம் அமைந்துவிட்டதா? இன்று வரை 'இல்லை' என்பதே இறை. இன் னும் மூலை முடுக்கெல்லாம் இராமாயண, பாரதக் கதை பரப்பு நிகழ்ச்சி களும், 'சாதி' சமய வெறிகளும் ஆடல் புரிகின்றன. இத்தகு காலத் தில் இப்பாவியம் ஆராயப்பட வேண்டியது, பலராலும் பரப்பப்பட வேண்டியது இன்றியமையாதது என்பதனால் ஆய்வுக்கு இப்பாவியம் எடுத்துக் கொள்ளப் பெற்றது.

இலக்கியம் ஓர் எளிய பொருளன்று; பல பொருள் விளக்கங்களும் தொடர்புகளும் கொண்டமைந்த பலநிலைகளையுடைய ஒரு சிக்கலான அமைப்பு. [1] 'பண்பட்ட மொழியால் ஒருமைப்பாடு உடைய கதை யில் இலக்கண வரம்பை ஒட்டிச் செய்வது' பாவியம் என்கிறார் [2]

[1] 'A Literary work of art is not a simple object, but rather a highly complex organization of a stratified character with multiple meanings and relationships' -Theory of Literature by Wellek and Warren P.27.

[2] India's Past. by A C. Macdonell. P. 87.

அறிஞர் மாக்டொனல். கலிவெண்பா என்ற இலக்கண வரம்பை ஒட்டி இப்பாவியம் செய்யப்பட்டதாலேயே ஈதோர் அரிய இலக்கியம் என நாம் பேச வரவில்லை. இப்பாவியத்தின், கருப்பொருள் 'கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகட்டும், என்பது. இதனை இரு நெறிகளால் உணர்த்த முடியும். ஒன்று, உரை நடை நெறி; மற்றொன்று பாட்டு நெறி.

பாவலன், தான் உணர்ந்த பொருளை, உணர்ந்த அளவில், பிறரும் உணரும் வண்ணம் உணர்த்துகிறான். இதனை உரைநடையாலும் உணர்த்த முடியும். பாட்டு அதனினும் வேறுபட்டு, சில கட்டுக்கோப்போடு, இனிமை தவழும் ஒரு நயத்தோடு நடைபோடுகிறது. ஒழுங்கின்றி எழுப்பப்படும் யாழோசை ஓர் ஒலிக்கூட்டம் என்ற அளவிலேயே கருதப் பெறும். அந்த ஒலியே முறையான நெறிகளில் எழுப்பப்பட்டு இன்பம் ஊட்டும்போது அஃது இன்னிசையாகி விடுகிறது. அதுபோலத்தான் பாவலன் சிதறிக் கிடக்கும் சொற்களை எடுத்து ஒழுங்குற அடுக்கி - அழகிய அரங்கம் அமைக்கிறான்; அவ்வரங்கில் ஒலிமங்கையை ஆடவிடுகின்றான். உரைநடை - ஓர் அழகான அரங்கம் போன்றது; பாட்டு, இசை தவழும் இன்னிசை அரங்கம் போன்றது.

குயில் கூவிக் கொண்டிருக்கும்; கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும்; வாசம் உடையநற்
காற்று குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுகள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு
பூக்கள் மனங்கமழும் பூக்கள்தொறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக்களிக்கும்

– சஞ்சீவி பர்வதத்தின் சாரல் : வரி 1 — 6.

சஞ்சீவி மலையை அறிமுகப்படுத்தவந்த பாவலன் குறிஞ்சிக்குரிய உரிப்பொருளை நினைவுபடுத்துகிறான். குயிலும் மயிலும், காற்றும்; ஊற்றும், மரமும், பூவும், பழமும், வண்டும் நினைவுக்கு வருகின்றன. 'கொண்டிருக்கும்' என்ற தொடரைத் திரும்பத் திரும்ப உரைத்தும், குயில்-மயில், காற்று-ஊற்று, பூக்கள்-ஈக்கள்—ஆகிய எதுகைச் சொற்களை அமைத்தும், ஒலி நயத்தை உண்டாக்கிவிடுகிறான்

(1) கால அளவு; அதனால் அமையும் நீட்டல் குறுக்கல் வேறுபாடு (2) தன்மை, வன்மையாகவும் மென்மையாகவும் ஒலிக்கும் வேறுபாடு (3) ஒலிக்கும் முறை : எடுத்தும் படுத்தும் ஒலிக்கும் அழுத்தத்தின் வேறுபாடு. [1] இம்மூவகையாலும் வேறுபடும் ஒலிகளை வெவ்வேறு வகையாக அமைத்து, வந்த அமைப்பைத் திரும்பத் திரும்ப வருமாறு செய்தலால் பிறக்கும் இனிய ஒழுங்கே, பாட்டை உரைநடையினும் வேறுபடுத்தி, உயர்த்திக்காட்டுகிறது.

பாவியத்தின் உரு: குப்பனும், வஞ்சியும் இளங்காதலர்கள்; மலைவாழ் மாந்தர். வஞ்சி-உலகமக்கள் பேசுவது நன்றாகக் கேட்பதற்கும், மண்ணுலகக் காட்சி எல்லாம் கண்ணுக்கெதிரே காண்பதற்கும் உரிய பச்சிலையைப் பறித்துத் தரும்படி குப்பனை வேண்டுகிறாள்; பச்சிலை பறித்தளித்தால் 'நோகாமல் முத்தங்கள் நூறு கொடுப்பேன், என்று உறுதியும் தந்து விடுகிறாள். கிட்டரிய காதற்கிழத்தி இடும் வேலையைக் குப்பன் விட்டெறிந்த கல்லைப்போல், மலைமேல் ஏறி-மூலிகை பறித்து வருகிறான். இருவரும் அதனை உண்டு ஞாலத்துப் பேச்சறிகிறார்கள். பிறகு முத்தமிட்டு மகிழத் தொடங்குவதற்கு முன்-குப்பன் அலறிப் புடைக்கிறான். எங்கோ நடக்கும் இராமாயணக் கதையில் - அனுமன் சஞ்சீவி மலையைத் தூக்கும் கட்டத்தைப் 'பாகவதன்' விளக்கிக் கொண்டிருக்கிறான். தான் நிற்கும் சஞ்சீவி மலையையே அனுமன் தூக்கிக் கடலில் இடப்போகிறான் எனக் குப்பன் அஞ்சி நடுங்குகிறான். அறிவுத் தெளிவுடைய வஞ்சி, அது கதை என்பதையும், பொய்யுரை, ஏமாற்று என்பதையும் குப்பனுக்குக் கண்முன்னே காட்டுகிறாள். குப்பன், உளந்தெளிகிறான். இதுவே பாவியத்தின் கதை. கதையில் - பெருஞ்சிக்கலும் இல்லை; திருப்பம் பல நிறைந்த அமைப்பும் இல்லை.

பாவலன் பாவியத்தை நடத்திச் செல்லும் பாங்கு, சுவையுணர்வோடு கீழ்வரும் வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

1 Principles of Literary Criticisms by I. Abercrombie. 2. 42. இலக்கியத்திறன் பர். மு. வ. பக். 193.




வரைபட விளக்கம் :

1 சஞ்சீவி மலையின் அறிமுகம்.
2 குப்பனின் தனிமை.
3 குப்பன் – வஞ்சி உரையாடல்.
4 பச்சிலை - பறித்தல், தின்னல்
5 மா நிலத்தார் கூற்றுகள்
6 பாகவதன் கூற்று
7 குப்பன் - வஞ்சி வினா, விடைகள்
8 குப்பன் - வஞ்சி இன்ப நிலை.

கோட்டின் புள்ளிகள் மேற்கண்ட எட்டு நிலைகளையும், கோட்டின் உயர்ச்சி–பாவின் சிறப்புப் பகுதியினையும், கோட்டின் சமநிலை பாவின் பொதுவான போக்கினையும் காட்டுகின்றன.

பாவிய மாந்தர் : பாவலர் இருவகைப்படுவர். அவர் தற்சார்புடைப் பாவலர் (Subjective Poet) என்றும், தற்சார்பற்ற பாவலர் (Objective Poet) என்றும் வழங்கப்பெறுவர். [1] படைப்பில் பங்கேற்போன் - 'தற்சார்புடைப் பாவலன்' என அழைக்கப்படுவான். பாரதிதாசன் – இப்பாவியத்தைத் தம் கூற்றாகவே படைத்தளிக்கிறார். பாவலன் கூற்று, இளவஞ்சி, குப்பன்; பாகவதன், மாநிலத்

1 We should certainly distinguish two types of poets, the objective and the subjective - Theary of litterature. P. 77.

தார் ஆகியோரின் கூற்றுகளின் குவியலாக இப்பாவியம் இலங்கு கிறது. குப்பனும் வஞ்சியுமே பாவியப் படிவாளர் (chief character) ஆகப் படைக்கப்பட்டுள்ளர்.

குப்பன்: பாவியத்தின் தலைமகன் (Hero) இவனே; வையம் அறியாதவன்; வஞ்சி காட்டும் கடைக்கண் பார்வைக்கு மாமலையையும் ஒரு கடுகாகக் கருதுபவன்; அவள் இட்ட பணி செய்து அவளைக் கட்டி மகிழ்பவன்; முத்தம் இட்டுக் குளிர்பவன்; எளிதில் அஞ்சும் நெஞ்சன்; பொய்யுரை கேட்டு மெய்ம்மயிர் பொடிப்பவன். குடல் அறுந்து போனதுபோல் குதிப்பவன்; பதைப்பவன்.

இளவஞ்சி: இவள் இப்பாவியத்தின் தலைமகள் (Heroine) குப்பனைக் கொஞ்சி வருபவள்: அஞ்சி நடுங்கும் மணவாளனின் அச்சம் போக உரையாற்றுபவள்.

> ‘காதல் நிசம்; இக் கனிமுத்தம் மிக்க உண்மை;
> மாதுதோள் உம்தோள் மருவுவது மெய்யாகும்’

என உண்மை உரை புகல்பவள்.

வஞ்சியின் படைப்பு புதுமையானது; தமிழக நடப்பியலுக்குக் கூட மாறானது; குப்பன் என்ற பாவியத் தலைவன் - ஆண்மகனாயினும் உலகம் சுற்றுபவனாக, மறம் நிறைந்தவனாக, வெளிப்பழக்கம் உடையவனாக அவனைப் பாவலர் படைக்கவில்லை, ‘வையம் அறியாக் குப்பன்’ எனத் தெளிவாக அவனைக் காட்டி விடுகிறார். பாகவதனின் புரட்டுரைகளைச் செவிமடுத்த அளவிலேயே - குப்பன் அவற்றை உண்மை என நம்பிவிடுகிறான். அனுமன் மலையைத் தூக்கும் நிகழ்ச்சியைக் கேட்ட அளவில்

> ‘முத்தம் கொடுத்து நெடுநேர மும்தொலைத்தாய்;
> செத்துமடி யும்போது முத்தம் ஒருகேடா ?
> என்றன் உயிருக்கே எமனாக வாய்த்தாயே!
> உன்றன் உயிரைத்தான் காப்பாற்றிக் கொண்டாயா ?
> தூக்கிவிட்டான்! தூக்கிவிட்டான்! தூக்கிப்போய்த் தூளாக
> ஆக்கிச் சமுத்திரத்தில் அப்படியே போட்டிடுவான் !

என உளம் பதறுகிறான். ஆனால் வஞ்சியோ இதற்கு எதிர்மாறாக இருக்கிறாள். உலகியல் உணர்ந்தவளாக இருக்கிறாள்: மூட நம்பிக்கை அற்றவளாக அறிவுரை கூறுகின்றாள்.

வாழ்க்கை நதிக்கு,வீண் வார்த்தைமலை யும்தடையோ?
வாழ்த்தாமல் தூற்றுகின்றீர் வந்துநிற்கும் இன்பத்தைப்
பொய்யுரைப்பார் இந்தப் புவியை ஒரு சிற்றெறும்பு
கையால் எடுத்ததென்பார் ஐயோஎன் றஞ்சுவதோ?

தமிழகத்தில் ஆண்பெண் இருபாலாருமே (1938ல்) மூடப் பழக்க வழக்கினரே. இருவருள்ளும் பெண்டிரே மிகுதியான மூடப்பழக்கத் தினர் என்பது நாடறி செய்தி. பாவலரின் மாந்தப் படைப்பில் குப்பன் உரைப்பதை வஞ்சியும், வஞ்சி உரைப்பதைக் குப்பனும் கூறு வதாக அமைந்திருந்தால் மிகப் பொருத்தமாக இருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது. எனினும் பாவலரின் புரட்சி நெஞ்சம் தாய்க்குலத்தை முதலிற் புதுமை நெறியிற் போக்க விரும்பியது போலும். பெண்டிர் உணர்ந்து திருந்திவிடின் குமுகாயந் திருந்துவது மிக விரைவில் கூடும் எனக் கருதியிருத்தல் கூடும்.

பாவியத்தின் கரு: இலக்கியத்தை இருவகைப் பெரும் பிரிவுகளா கப் பகுக்கலாம். மருந்திலக்கியங்கள் என்றும், விருந்திலக்கியங்கள் என்றும் அவை பெயர்பெறும். அறிவுணர்ச்சி முன்னின்று; அழ குணர்ச்சி பின்னிற்பன மருந்திலக்கியங்கள்; அழகுணர்ச்சி முன் னின்று, அறவுணர்ச்சி பின்னிற்பன விருந்திலக்கியங்கள். திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி முதலாயின மருந்திலக்கியங்களாகவும், கலித் தொகை அகநானூறு முதலாயின விருந்திலக்கியங்களாகவும் கொள் ளப்பெறும். பாவேந்தரின் இப்பாவியத்துள் குப்பன் - வஞ்சியின் நலங்கனிந்த காதல் வாழ்க்கை முன்னின்று, மூடப்பழக்க ஒழிப்பு என் னும் அறம் பின்னிற்றலின் - இது விருந்திலக்கியத்தின் பாற்படும்.

பாவியத்தின் தலையாய கருப்பொருள்: குமுகாயச் சீர்திருத்தம்.

'நல்ல இமயம் நலங்கொழிக்கும் கங்கைநதி
வெல்லத் தமிழ்நாட்டின் மேன்மைப் பொதியமலை
செந்நெல் வயல்கள் செழுங்கரும்புத் தோட்டங்கள்
தின்னக் கனிகள் தெவிட்டாப் பயன்மரங்கள்
இன்பஞ் செறிந்திருக்கும் இப்பெரிய தேசத்தில்
முப்பத்து முக்கோடி மாந்தர்கள் மொய்த்தென்ன?
செப்பும் இயற்கை வளங்கள் செறிந்தென்ன?
மூடப் பழக்கம் முடிவற்ற கண்ணுறக்கம்
ஓடுவ தென்றோ உயர்வது மென்றோ?'

எனக் கண்மூடி வழக்கங்களை இடித்தும், (தொடர்ச்சி 33-ம் பக்கம்)

தொடர் - ஏழு

# நூற்சுருக்கம்

## உலகின் முதல் இலக்கியச் செம்மொழி

## (The primary Classical language of the world)

மொழிநூற் பேரறிஞர் பண்டித. புலவ, கலைத்தலைவர்
ஞா. தேவநேயப் பாவாணர் எழுதியது.

வாய்ச்செய்கையொலிகள் :

கவ் - கவ்வு, ஊது, அங்கா - வாயைத் திறத்தல். இளி - பல்லைக் காட்டல். கவ்வு என்றதனடியாகப் பல சொற்கள் பிறந்துள்ளன. கவனம், கவ்வு - வவ்வு, அவ்வு - அவா, கவர், கவறு, கவட்டை கவண், கவை, கப்பு, கப்பல்.

சுட்டொலிகள் : ஆ, அ, ஈ, இ, ஊ, உ.

சுட்டொலிகள் முதலில் வாய்ச்செய்கை யொலிகளாகவே பிறப்பிக்கப்பட்டன. உகரச் சுட்டு இன்று வழக்கிழந்து போயினும் மற்ற

ஒலிகள் இன்றும் அவற்றின் பணியைத் தவறுது செய்து வருகின்றன. வேறு மொழிகளில் அவை சிதைந்திருப்பதையே காணமுடியும்.

**தமிழின் வளர்ச்சியும் விரிவும்.**

(கி. மு. 100,000 – 50,000.)

ஒரு கருத்தின் தொடர்பாக மற்றொரு கருத்து பிறக்கின்றது. தொடர்பு, ஒப்புமை, காரணம், பின் விளைவு என்னும் நான்கு அடிப்படையில் இதனைக் காணலாம். ஊகாரச் சுட்டினடியாகப் பிறந்துள்ள எண்ணங்கள், தமிழிலும் ஏனைத் திரவிட மொழிகளிலும் மட்டுமன்று; பிற மொழிகளிலும் மிகுதியாம்.

இலெமூரியத் தமிழர் அறிவாலும் நுண்ணோக்காலும் இயற்கையை நன்கு ஊன்றிக் கவனித்து ஒரு சொற்பிறப்பு வட்டத்தைக் கண்டு பிடித்தனர். அச்சொற்பிறப்பு வட்டத்தில் அடங்கியுள்ள எண்ணங்களாவன.

1. முன்மை.
2. முன்னுறல்.
3. முற்செலல்.
4. மேற்செலல்.
5. நெருங்கல்.
6. தொடுதல்.
7. வளைதல்.
8. துளைத்தல்.
9. நுழைதல்.
10. முன்னுறல். (மீண்டும்)

இவ்வட்டத்தின் விளக்கம் :

முன்மையின் வேர்க்கருத்து முன்பே விளக்கப்பட்டது.

ஒரு மகவு தாய் வயிற்றிலிருந்து பிறப்பிக்கப்படுகின்றது. பிறப்பித்தல் என்பது முன்னுறலாகும். மாந்தன் ஒருவன் வீட்டு வாயிலினின்று வெளிவருதலும் முன்னுறலாகும்.

உயிர்கள் அனைத்தும் இரை, உறையுள் கருதித் தம் இருப்பிடத்தினின்று வெளியே செல்லவேண்டியுள்ளது. அவற்றின் இயக்கமே முற்செலல் ஆகும்.

முற்செலுமியக்கம் மேலும் முன்னேறுகையில் நெருங்கல் தோன்றும். நெருங்கலால் தொடுதல் தோன்றும். தொடுதலால் தாண்டிச் செல்ல முடியாத தடை ஏற்படும் பொழுது வளைதல் ஏற்படும். தடை எளிதாயிருந்தால், துளைத்தல் ஏற்படும். துளைத்தலின் வழி நுழைதல்

முடிந்ததும் மீண்டும் மூன்னுறல் தோன்றும். இவ்வாறு வட்டம் முழுமையடைகின்றது.

இவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்றாகக் கருத்துகளும் துணைக் கருத்துகளும் பிறந்து பல்கி வளர்கின்றன. முன்கூறப்பட்ட ஒன்பது கருத்துகளினின்றும் பற்பல சொற்கள் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாக வளைதல் என்னும் கருத்தினடியாக, கோணுதல், வணங்குதல், திரும்புதல், மீள்தல், மடங்குதல், திரைதல், திருமபுதல் போன்ற பல கருத்துகள் பிறத்தல் உண்டு. இவ்வாறு பிறக்கும் கருத்துகளால் இயல்பாகத் தோன்றிய சொற்கள் தமிழில் எண்ணற்றவை.

(இனிவரும் சிலபகுதிகள் – ஆயிரக் கணக்கான தமிழ்ச் சொற்களின் பிறப்பியல் விளக்கங்கள் – ஏற்கனவே பாவாணரின் "முதல் தாய்மொழி" எனும் நூலின் வாயிலாகத் தமிழர்க்கு அறிமுகமானவையாதலால் அவை இச் சுருக்கத்தில் இடம் பெறவில்லை.)

**தமிழ் இலக்கிய வளர்ச்சி — தமிழ்நெடுங்கணக்கு உருவாதல் :**

தற்பொழுதையத் தமிழ் நெடுங்கணக்குக்கு முன்னர் மூன்றுவகையான எழுத்துமுறை நிலவியிருக்கக்கூடும். அவை, பட எழுத்து, கருத்தோவிய எழுத்து, அசைக்குறியீடு என்பனவாம்.

தமிழ் வரிவடிவம், எழுத்துகளின் எண்ணிக்கை, பெயர்கள், அமைப்பொழுங்கு, தலைமுறை, வடிவம், அளவு இவற்றையும், முதல், இடை, கடை எழுத்துகளையும், எழுத்துகளின் உருமாற்றம், சொற்களின் இணைவு, அமைப்பு ஆகியவற்றையும் விளக்கும் பன்னிரண்டு பிரிவுகளால் ஆகியது. இவை தமிழ் வரிவடிவத்தின் அடிப்படையாகும்.

**தமிழ் நெடுங்கணக்கின் வைப்பு முறை:**

உயிரெழுத்துகள் முதலிலும், உயிரெழுத்தின் துணைகொண்டு அல்லாமல் ஒலிக்கப் பெருவாதையான் மெய்யெழுத்துகள் அடுத்தும் வைக்கப் பெற்றன. ஆய்தம் 'க்' ஒலிப்பின் ஒரு நுண்ணிய வகையாதலான் அதற்கு முன்பு வைக்கப்பெற்றது.

உயிரெழுத்துகளில் மாத்திரை கருதிக் குறில் முதலிலும் நெடில் பின்னரும் வைக்கப் பெற்றன. ஆயினும் பழந் தமிழனின் வாயினின்று முதலிற் போதந்தது நெடில் ஒலியேயாகும்.

அ. இ. உ. என்பன முதன்மையான உயிர் எழுத்துகளாகவும் முறையே சேய்மை, அண்மை, முன்மைச் சுட்டுகளாகவும் இருத்தலின் முதலில் வைக்கப்பட்டன.

மெய்யெழுத்துகள் வல்லினமும் வல்லினம் ஒவ்வொன்றையடுத்து அதத்தற் கினமாய மெல்லினமும், முதலில் வைக்கப்பட்டன. பின்னர் இடையினம் வைக்கப்பட்டது.

இவையனைத்தும் நாவானது வாயின் உள்ளுறுப்புகள் ஒவ்வொன்றையும் தொடுவதில் ஓர் ஒழுங்கைப் பின்பற்றித் தொண்டையிலிருந்து உதடுவரை உள்ள உறுப்புகளிலிருந்து பிறக்கும் வரிசைப் படி அமைக்கப்பட்டுள்ளன. முதலில் தமிழ் நெடுங்கணக்கு 'வ' கரத்தோடு முற்றுப் பெற்றிருந்தது. ழ, ள, ற, ன பின்பு சேர்க்கப்பெற்றன. ஆகையால் அவை இறுதியில் இடம் பெற்றன. லகரமே ளகரமாகிப் பின்னர் ழகரமாகவும் ஆயிற்று. ரகரம் றகரமாக ஆயிற்று. றகரத்திற்கு இனமாக னகரம் பிறந்தது. னகரம் தோன்றுவதற்கு முன் 'ந'கரமே சொல்லிடையிலும் ஈற்றிலும் பயின்றது. எ-டு: பழநி, வெரிந். பிற் சேர்க்கப்பட்ட எழுத்துகளும் முன்னெழுத்துகளின் வைப்பு முறையைப் பின்பற்றியே வைக்கப்பட்டன. ழகரம் ளகரத்துக்கு முந்தியிருப்பது அதனாலேயே. இப் பின்னுண்டெழுத்துகளும் முதலிலேயே தோன்றியவையாயிருந்தால் ழ, ள இரண்டும் லகரத்துக்கு முன்னும் ற, ன, இரண்டும் மகரத்துக்கு முன்னும் வைக்கப் பெற்றிருக்கும். ழ, ள, ற, ன இவை நான்கும் இறுதியில் வைக்கப் பெற்றமைக்குக் காரணம் அவை சமற்கிருதத்தில் இல்லாமையே என்று கூறுவதினும், கால ஆராய்ச்சியற்ற முழுமடமை வேறெதுவும் இருக்க முடியாது.

**தமிழிலக்கணத்தின் சிறப்பு :**

தமிழிலக்கணம் மெய்ப்பொருள் அடிப்படையில் அமைந்தது. உயிர், மெய், உயிர்மெய், பெயர், வினை என்னும் அமைப்புகள் அதனைக் காட்டும். உலகப் பொருள்கள் அனைத்தும் முப்பிரிவில் அடங்கும். உயிர்; உயிர் அற்ற பொருள்; உயிர் உள்ள பொருள் என்பன அப்பிரிவுகள். தமிழ் எழுத்துகள் இம்மூவகைப் பிரிவுகளையும் ஒக்கின்றன. எனவே அவை உயிர், மெய், உயிர்மெய் எனப் பகுக்கப் பெற்றன. அதனாலேயே உயிர்மெய் எழுத்துகட்குத் தனிவடிவம் கொடுக்கப் பெற்றது. முதன்முதலாக இவ்வாறு செய்யப் பெற்றது தமிழிலேயே.

ஆரியர் வருகைக்கு முந்தியதும் அழிக்கப்பட்டுப் போனதுமாய தமிழிலக்கியத்தின் விரிவும் வகையும் கணக்கிலடங்கா. கணிதம், அறநூல், இலக்கணம், ஏரணம், இலக்கிய ஆய்வு, மெய்யறிவு, முதற் பொருளாய்வு, ஓகம், இசை, நாட்டியம், நாடகம், மருத்துவம், அறுவை, இதள் மாற்றியம், பொறியியல், பொருளியல், வானியல் இவையும் இன்னும் பலவும் கூறும் நூற்கள் பல இருந்தன.

தொழிற்கலைகளாகிய உழவு, நெய்தல், பானை செய்தல், மீன் பிடித்தல், இன்னும் வியப்புக்குரிய மந்திரக் கலைகள் பலவும் வழிவழியாக வழங்கி வந்தன. முறிந்த எலும்பை விரைந்து ஒட்ட வைப்பனவும், வாழ்நாளை மிகுக்கும் உயிருட்டம் (elixir) தருவனவுமான பச்சிலைகள் தமிழகத்தில் மலிந்திருந்தன. அவை பற்றிய அறிவும், கைபார்த்து நோய்க் காரணம் அறிந்து மிகச் சிக்கலான நோயைத் தீர்க்கும் அறிவும், பழந்தமிழகத்தில் மிகுந்திருந்தன. நரம்புகளின் அமைப்பு முறையை நன்கறிந்து கையாள்வதால் எதிரியை மயக்கவும், குறிப்பிட்ட கால அளவு கணித்து அவரை மீட்கவும், அல்லது, கொல்லவும் தெரிந்த மல்லர்கள் இன்றும் சிலர் தமிழகத்தில் உளர்.

ஏழு நாட்களைக் கொண்ட கிழமையும், 30 நாட்களைக் கொண்ட மாதமும், 12 மாதங்கொண்ட ஆண்டும் இலெமூரியத் தமிழர் ஏற்படுத்தியவையே!

இலெமூரியத் தமிழரின் கணக்கியல் நுண் திறமைக்குக் கீழ்க் கண்ட பின்னக்கணக்கு முறையே சான்று பகரும்.

| | | | |
|---|---|---|---|
| முக்கால் | $\frac{3}{4}$ | நான்மா | 1/5. |
| அரை | $\frac{1}{2}$ | இருமா | 1/10. |
| கால் | $\frac{1}{4}$ | மா, ஒருமா | 1/20. |
| முண்டாணி மூவீசம் | 3/16 | அரைமா | 1/40. |
| அரைக்கால் | $\frac{1}{8}$ | காணி | 1/80. |
| மகாணி, வீசம் | 1/16 | அரைக்காணி | 1/160. |
| | | முந்திரி, முந்திரை | 1/320. |

உட்பின்னப் பட்டியல் :

| | | | |
|---|---|---|---|
| $6\frac{1}{4}$ | தெருட்டுகள் | ≃ | 1 நுண்மணல் |
| 108 | நுண்மணல்கள் | ≃ | 1 வெள்ளம் |

| | | | |
|---|---|---|---|
| 60 | வெள்ளம் | ≈ | 1 குரல்வளைப்பிடி |
| 40 | குரல் வளைப்பிடி | = | 1 கதிர்முனை |
| 20 | கதிர் முனை | = | 1 சிந்தை |
| 14 | சிந்தை | = | 1 நாகவிந்தம் |
| 17 | நாகவிந்தம் | ≈ | 1 விந்தம் |
| 7 | விந்தம் | ≈ | 1 பாகம் |
| 6 | பாகம் | ≈ | 1 பண்டம் |
| 5 | பண்டம் | ≈ | 1 குணம் |
| 9 | குணம் | ≈ | 1 அணு |
| 7 | அணு | ≈ | 1 மும்மி |
| 11 | மும்மி | = | 1 இம்மி |
| 21 | இம்மி | = | 1 கீழ் முந்திரி |
| 320 | கீழ்முந்திரி | = | 1 முந்திரி (மேல் முந்திரி) |
| 320 | மேல் முந்திரி | = | ஒன்று. |

1 கீழ்முந்திரி ≈ 1/320 இன் 1/320 ± 1/102400.

1 தெருட்டு ± $\frac{1}{2,3238245,3022720,000,0000.}$

**பேரெண்கள் :**

| | | |
|---|---|---|
| கும்பம் | = | நூறு கோடி |
| கணிகம் | = | ஆயிரங் கோடி |
| தாமரை | ± | கோடி கோடி |
| சங்கம் | = | நூறிலக்கம் கோடி |
| வானரம் | = | பத்தாயிரம் இலக்கம் கோடி |
| பரதம் | = | நூறாயிரங்கோடி. |

ஆம்பல், வெள்ளம் இவற்றின் மதிப்புத் தெரியவில்லை.

இலக்கியம் அனைத்தும் பாட்டாகவே இருந்தது. அறிஞரெல்லாரும் புலவரே. பாட்டினை எழுதியதோடு பாட்டால் பேசியும் வந்தனர். பாட்டு மிக நுண்ணிய உயர்ந்த வளர்ச்சி எய்தியது. மாந்தனின் பாட்டியல் வளர்ச்சியின் சிறந்த வண்ணங்கள் தமிழில்தான் உள்ளன. வெண்பா, கலிப்பாக்கட்கு ஒப்புமை வேறெந்த மொழியிலும் இல்லை.

''சொல்லும் பொருளும் இயைபுற நடந்து ஒழுங்கையும் அழகையும் தோற்றுவிக்கும் தன்மையின் மிக உயர்ந்த நிலையைத் தமிழிலன்றி வேறெங்கும் காணமுடியாது'' என யாப்பருங்கல விருத்திப் பதிப்புரையிற் காணலாம்.

(வளரும்)

(மு. மகிழரசன்)

# பாவேந்தர் புரட்சி!

கூன்விழுந்து வளைந்திருந்த முதுகைத் தட்டிக்
கூப்பிட்டார்; என்தோழா! எந்த நாளும்
ஏன்விழுந்த நிலையோடு முடங்கு கின்றாய்?
எண்ணத்தில் சுவைகூட்டு நிமிர்ந்து மேலே
தேன்விழுந்த கூடங்கே தெரிவ தைப்பார்!
தேற்றங்கொள்; ஏறுமலை என்றார். இன்று
நானழுந்தும் தமிழ்த்தேனின் இன்பங் கூட
நலம்மிகுந்த பாவேந்தர் புரட்சி அன்றோ!

கூட்டுக்குள் அடைபட்ட குருவி போலக்
குளிர்நடுக்கம் கொண்டவனை அழைத்தார்; "தம்பீ!
வீட்டுக்குள் உறங்குவது வீணன் வேலை.
விடுபட்டு வெளியேறி வா, வா அன்னை
நாட்டுக்குப் பணியாற்று; நல்ல தைச்செய்!
நனிவளங்கள் செய்"யென்றார்; இன்று வாழ்க்கை
ஏட்டுக்குள் ஏற்பட்ட ஏற்றம் எல்லாம்
ஏற்றங்காண் பாவேந்தர் புரட்சி அன்றோ!

கால்பிடித்துக் கைபிடித்துக் கைகள் கட்டிக்
கால்வயிற்றுக் கஞ்சிக்குப் பதவிக் கென்று
வால்பிடித்துப் பல்லிளித்துக் குழைந்தி ருந்த
வதைபட்ட அறிவிலியை அழைத்தார்; "ஆட்சிக்
கோல்பிடித்துச் சீருயர்ந்த முன்னாள் வாழ்வைக்
கொஞ்சத்தில் மறந்தாயா?" என்றார்; இன்று
வேல்பிடித்து விறல்மிகுக்கும் பயிற்சி எல்லாம்
வீறுணர்த்தும் பாவேந்தர் புரட்சி அன்றோ!

வீறுயர்ந்து வாழ்ந்திருந்த காலம் விட்டும்
வீணர்களின் சூழ்ச்சியிலே மயங்கிக் கெட்டும்
ஏறுயர்ந்த பீடழிந்தும் இளைத்துப் போன
எழில்மிக்க தமிழ்மகனை அழைத்தார்; தம்பீ
ஊறுயர்ந்த கொடுமைகளை உற்றுப் பாராய்!
உடனடியாய் ஒழித்திடுவாய்; என்றார். இன்று
மாறுயர்ந்த போர்க்கோலம் பூண்ட தெல்லாம்
மறம்மிகுந்த பாவேந்தர் புரட்சி அன்றோ!

மறம்நின்று புகழ்யாத்த மரபில் தோன்றி,
மனம்நடுங்கும் தமிழ்மகனை அழைத்தார்; தம்பீ!
திறங்குன்றி ஏன்குறுகி ஒடுங்கு கின்றாய்?
திரும்பிப்பார் உன்முன்னோர் கதையை; இங்கே
புறம் நின்று கொக்கரிக்கும் பகையைப் பாராய்!
புறப்பட்டுச் செல்! கொல்! வெல்! என்றார்; இன்று
விறல்நின்று சென்றெதிர்த்த வேட்டை எல்லாம்
வீறுடைய பாவேந்தர் புரட்சி அன்றோ!

செந்தமிழ்த்தாய் இன்னலுறப் பார்த்தி ருக்கும்
சிறுமதியின் ஒருமகனை அழைத்தார்; இங்குக்
குந்திஎன்ன கதைபேசிக் கொண்டிருந்தாய்?
கொதித்தெழுந்து பாய்ந்திடுக கொல்லைப் பக்கம்;
இந்திவந்து நம்நாட்டில் இடம்பி டிக்கும்
இழிநிலையைச் சீறிஅகற் றென்றார்; இன்று
வெந்திறல்சேர் எந்தமிழர் ஆர்த்த வெல்லாம்
விறல்மிகுந்த பாவேந்தர் புரட்சி அன்றோ!

தமிழ்மக்கள் நல்வாழ்வில் பித்துக் கொண்டார்!
தளர்ந்திருந்த உடன்பிறப்பை அழைத்தார்; நெஞ்சில்
தமிழ்நாட்டின் விடுதலைக்கு வித்தும் இட்டார்
தளையறுக்கப் படைதிரட்ட வேண்டும் என்றார்!
தமிழ்மொழியே நமக்கென்றும் உயிராம் என்றார்.
தகர்த்தெறிக பகையாட்சி என்றார்; இன்று
நமையுணர்வால் உயிருட்டி ஆர்க்கச் செய்து
நடப்பித்தல் பாவேந்தர் புரட்சி அன்றோ! O

(24-ஆம் பக்கம் தொடர்ச்சி)

'பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டாம்என் கின்றீரோ?
மண்ணுக்கும் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே'

எனப் பெண்ணடிமை நிலையைச் சாடியும்,

'வாழ்கின்றார் முப்பத்து முக்கோடி மக்கள் என்றால்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகையிருக்கும்.'

எனச் சாதிச் சழக்கை இழித்துரைத்தும் பாவலர் குமுகாய மாற்றத்தை வேண்டி நிற்கின்றார்.

பாவியத்தின் செம்பாகம் குமுகாய இழிநிலைகளைச் சாடுவதால் இதனைச் சிலர் விளம்பர இலக்கியம் (Probaganta litterature) எனத் தள்ளிவிடவும் கூடும். நாட்டில் ஒரு பகுதியில் ஒரு துறையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்த விளம்பரம் செய்யும் இலக்கியம், அப்பகுதி சீர்திருந்திய பிறகு பயன்படுவதில்லை. ஆதலால் சாதி, சமய, மொழி, முதலான நிலையற்ற சிக்கல்களை (Temporary Problems)ப் பாடும் பாவலனின் பாவியங்கள் அச்சிக்கல்கள் தீர்ந்தவுடன் அவை தாமும் மடிந்துவிடுகின்றன எனத் திறனாய்வாளர் சிலர் உரைக்கின்றனர். இலக்கியப் படைப்பாளன் குமுகாயத்துள் ஓர் உறுப்பினன்; குமுகாய ஏற்றத்தாழ்வுகளுக்கு அவனும் பொறுப்பாளி; அவ்வாறிருக்கையில் குமுகாயத் தேவைகளை முன்னிறுத்திப் பேசாமல் அவன் எவ்வாறு இருக்கமுடியும்? எல்லா இலக்கியங்களும் ஏதேனும் ஒரு பொருளைக் கருவாகக் கொண்டெழுந்தவையே! ஒரு தேவையை நிரப்ப உண்டாகியவையே! அவ்வண்ணமாயின் இலக்கியத்தைப் பொருள் அடிப்படையில் (Probaganta litterature Non probaganta litterature) எனப் பிரிப்பதில் என்ன பொருள் இருக்கிறது?

விக்டர்ஃயூகோ, வால்டேர், உரூசோ, ஆகியோரின் இலக்கியப் படைப்புகள் பிரஞ்சுக் குமுகாயத்தில் ஊறிக் கிடந்த ஊழல்களை அம்பலப்படுத்தவில்லையா? மார்க்சிம் கார்க்கி, தால்சுடாய் ஆகியோரின் எழுத்துகள் உருசியக் குமுகாயத்தில் புரட்சியை உண்டாக்கவில்லையா? குமுகாயச் சீர்திருத்தம் பேசின அவர்களுடைய இலக்கியப் படைப்புகள் அன்றும் இன்றும் போற்றப்படவில்லையா? நாட்டு

பக்களுள் ஒருவனைக் கலந்துறையும் ஒருவன் - அதுவும் எழுத்துக் கலைஞன் நாட்டில் புரையோடிக் கிடக்கும் ஊழல்களை எடுத்தோதக் கூடாது என்றால் பின் யார்தான் அதற்கு உரிமை உடையார்? ஆதலால் பாவேந்தர் பாரதிதாசனின் படைப்புகளுள் சிலவற்றை விளம்பர இலக்கியம் - நிலையான வாழ்வற்றது எனத் தள்ளிவிடுவதில் பொருளில்லை; பொருத்தமும் இல்லை.

**பாவியத்தின் மொழிநடை:** எளிய நடையில், இனிய முறையில் பாவியம் தங்கு தடையின்றி நடைபோடுகிறது. 428 அடிகளைக் கொண்டு கலிவெண்பா யாப்பில் புனையப்பட்ட சிறுபாவியம் என்றாலும் கருத்தாலும், கருத்துரைக்கும் நெறியாலும் சிறந்து நிற்கிறது.

13 உவமைகள் கையாளப் பெற்றுள்ளன; சில புது உவமைகளும் அவற்றுள் அணி செய்கின்றன;

(1) ராமன், லங்கை, ராமாயணம், ராம் முதலான வடசொற்கள் தமிழ் இலக்கண நெறிப்படி 'இகரம்' – கூட்டப் பெறாமல் வந்துள்ளன.

(2) தோஷம், சூக்ஷ்மம், ஊ ஹூ ஹூ ஹூ, விஷயம், உஸ், அஸ், விஸ்வரூபம், ஜாம்பவந்தன், லக்ஷ்மணன், ஓஹோ. நிமிஷம், சந்தோஷம், ஜானகி, காந்தஸ்மரண் ஜய – ஆகிய வடமொழிகள் தற்பவங்களாகத் தமிழ் வடிவம் பெறாமல் ஆளப்பெற்றுள்ளன. (பாரதிதாசன் கவிதைகள் – முதற்றொகுதி 2-ஆம் பதிப்பு 1961, செந்தமிழ் நிலைய வெளியீட்டை முதலாகக் கொண்டே இப்புள்ளி விரிவுகள் தரப் பெறுகின்றன).

(3) வாசம், சஞ்சீவி, பர்வதம், தேகம், சுகம், வாரம், மோசம், சித்ரம், புத்ரன், பூலோகம், பூர்த்தி, பதுமை, கரம், சகி, சோதரன், பேதம், கீர்த்தி, புத்தி, சகோதரர், ஏகம், சிந்தனைசக்தி, பரமபதம், பிரசங்கம், சத்தம், சுகி, எமன், சமுத்திரம், மார்க்கம், நேசன். நிசம், மாது, ஆபத்து, நாதர், பிரியம், ஆச்சர்யம், சத்தியம், போகம், எசமானன், பாகவதன், கிருபை, அஞ்சலி, மூத்தி, சித்தம், சுவர்க்கம், இதயம், சம்பாதித்தல், சரித்திரக்காரர், நாகம், கோபம், சம்பவி, அகம் பாவம், அனுபவி ஆக ஏறத்தாழ 52 வடசொற்கள் பாவியத்துள் பங்கு பெற்றுள்ளன.

தனித்தமிழ் ஆர்வங்கொண்ட பாவேந்தரின் பாவியத்திலா இத்தனை வடசொற்கலப்பு எனச்சிலர் ஐயுறக்கூடும்! கலப்புக்கு இவை காரணமாகலாம்.

(1) பாவலரின் தொடக்கக்கால முதற்பகுதியில் வந்த பாவியம் இது. இற்றைக்கு 28 ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்டது.

(2) மேற்கண்ட வடசொல்லாட்சிகளுள் பெரும்பாலன, பாவலர் கூற்றுகப் பாவியத்துள் வரவில்லை. கதை மாந்தர் கூற்றுகவே அவை வருகின்றன. கதை மாந்தரின் பேச்சை அப்படியே உணர்த்தப் பாவலர் விரும்பி இருக்கக்கூடும்.

**பாவியத்தின் தனித்தன்மை (Individuality):** பாவலர் பாரதிதாசனின் பாடல்கள் என்றுலே சில தனியியல்புகள் உண்டு. பாரதியாரின் நிழலில் வளர்ந்தவர் பாரதிதாசன் என்றுலும் பாரதிதாசன் பிறப்பிக்கப்பட்ட பாவலர் (Maker) அல்லர். பிறவிப் பாவலர் (Possessed Poet) ஆவர். பாரதி, பாரதிதாசன் ஆகிய இருவரின் இலக்கியங்களை ஆசிரியர் - மாணுக்கர் என்ற கண்கொண்டு பார்க்காமல் இருவரும் இருவேறு பாவலர் என ஒப்பிட்டு ஆய்வோமாயின் பாரதிதாசனின் உச்சநிலை நன்கு விளக்கம் பெறும்.

பாரதியைக் காட்டிலும் அவருடைய 'தாசன்' பலவேறு துறைகளில் மேம்பட்டு நிற்பதை நாம் பார்க்கிறோம். இஃது இன்றளவும் போதிய அளவு நிறுவப்படவில்லை; பரப்பப்படவும் இல்லை. தனிப் பாவியப் படைப்பில் பாரதிதாசனுக்குப் பாரதியைக் காட்டிலும் தனியிடம் உண்டு. சான்று: 'பாண்டியன் பரிசு'. மொழி பற்றிய பாடல்களிலும் பாரதிதாசனே உயர்ந்து நிற்கிறார்; சான்று: 'தமிழியக்கம்' அகச்சுவைப் பாட்டுகளிலும் பாவலர்க்கு மேலிடம் உண்டு. சான்று: 'காதல் நினைவுகள்'.

மலர்ந்து மணம் பரப்பும் தமிழ்ப் பூக்காட்டில் இருந்து, அருந்தி பாரதிதாசன் சேர்த்தளித்த இலக்கியப் படைப்புகள் சிலவல்ல; பாட்டு, பாட்டுக்காக மட்டுமன்று (Poetry for Poetry's sake) அது நாட்டுக்காக என அவரளித்த சீர்திருத்தப் பாட்டுகளின் பயன்பாடுகள் கொஞ்சமல்ல; தமக்காகத் தாம் என்ற நிலை மாற்றித் தமிழ்க்காகத் தாம் என்ற நிலை ஆக்க அவர் ஆற்றிய தொண்டுகள் அளவிடற்கரிய. இம்மூன்று இலக்குகளையும் தன்னகத்துக் கொண்டிலங்குகிறது 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்' - என்ற இச்சிறு பாவியம். பாவிய உலகில் கருத்துகளைக் குழைத்து அதனைக் காதல் பொற்கிண்ணத்தில் வைத்தளிக்கும் படைப்புகளுள் - ஒன்றுகத் திகழ்கிறது.

# பாரதிக்குப் பின் ........?

(மணிவேலன்)

சொல்லறையால் வெள்ளையரின் வல்லாட்சி வீழ்ந்துபடத்
தூண்டி, மக்கள்
'கல்லறையில் படுத்தாலும் கைவிலங்கை உடைக்காமல்
கையைக் கட்டிப்
புல்லரென வாழ்வதற்கோ ஒப்புகிலோம்!' எனவெழுந்து
புரட்சி செய்ய
வில்லெழுந்த அம்பாகப் பாவடித்தார் பாரதியார்!
மிக்க உண்மை!

'பாரதிக்குப் பின்னரொரு பாவலனே இல'னென்று
பதட்ட மாக
ஊரறிய சோற்றினிலே பூசணிக்காய் மறைக்கின்ற
உலுத்தர் தம்மை
யார் பொறுப்பார்? நாக்கொழுப்பே யல்லாமல் உண்மையென
யாரே ஏற்பர்?
வேர் பழுத்த பலாப்பழத்தைக் கசப்பென்று பேசுகின்றீர்
வீணில் நீவிர்!

நாட்டுக்கு விடுதலையே கிடைத்தாலும் நந்தமிழர்
நைந்து மூடக்
கூட்டுக்குள் அடைபட்டுக் குமுகாயப் பழஞ்சகதிக்
குள்ளே வீழ்ந்து
மீட்பதற்கே இயலாத நிலையிருக்கக் கண்டவுடன்
மீசை நீவி
வேட்டெஃக வெடிப்பாடல் பாடியதோ உம்காதில்
வீழ வில்லை?

குமுகாய விடுதலையே உயிர்மூச்சாய்க் கொண்டிருந்த
குயிலை, மக்கள்
அமிழ்ந்து பழஞ் சோற்றினிலே மூழ்காது காத்திட்ட
அண்ணல் தம்மை,
சிமிழ்க்காது தமிழுக்குக் காவலினைச் செய்திட்ட
சிறுத்தை தன்னை
'இமயமலை கண்ணுக்குத் தெரியவில்லை!' என்பார் போல்
ஏன்கா ணுரே!

காதலினைச் சொல்லுகையில் சொல்லொழுக்கும் உணர்வொழுக்கும்
கனிந்து சொட்டும் !
தீதென்று தெரிந்தவற்றைச் சாடுகையில் நெடுவாளாய்ச்
சுழன்று வெட்டும் !
'ஓதுதற்கு வடமொழியே!' என்பார்க்குத் தேள் கொடுக்காய்
ஓங்கிக் கொட்டும் !
'ஏதுண்டு தமிழினிலே?' என்பாரை உதைத்துருட்டும்
ஏற்கு மட்டும் !

கைம்மை என்ற கொடுமையினுல் பெண்குலத்தை மிதித்தவரைக்
கடிந்து குட்டும் !
பொய்மையினுல் பிழைப்பதற்கு வழி வகுப்பார் தாடையிலே
ஓங்கித் தட்டும் !
மெய்யினிக்க உணர்வூறத் தமிழ்ப் புகழைப் பாடுகையில்
மேல்வான் முட்டும் !
தொய்கின்ற தமிழ்மகனின் மனக்கதவைத் திறப்பதற்கே
ஏங்கித் தட்டும் !

சீர்கெட்ட தமிழினத்தைக் குறைகூறித் திருத்துகையில்
தீயைக் காட்டும் !
வேர்சாய்ந்த செடிபோன்ற ஏழைகட்கு விரைந்துகொழு
கொம்பை நாட்டும் !
ஊர்கெடுக்கும் கூட்டத்தைச் சருகாக்கி எரிதழலை
உடனே மூட்டும் !
நீர் கெட்ட தமிழ்க்குளத்தில் நீர்வந்து நிறைந்துவிட
வாய்க்கால் கூட்டும் !

முரண்பட்டுத் தமிழ் பழிப்போர் யாரெனினும் உடனடியாய்
வாயைப் பூட்டும் !
'இருண்டிருக்கும் வீட்டு'க்குக் 'குடும்பவிளக்' கேற்றி வைக்க
வழியைக் காட்டும் !
திரண்டசுவைத் தமிழ்ச் சுவடிக் கன்னத்தில் 'எதிர்பாரா
முத்தம்' தீட்டும் !
உருண்டொழுகு சுவையாலே 'அழகின் சிரிப்' பெதுவென்றே
உவந்தே ஊட்டும் !

'பாண்டியனார் பரி'சாலே குடியாட்சி வேண்டுமெனப்
படித்துச் சொல்லும் !
கீண்டுதிர்க்கும் 'தமிழியக்கம்' தமிழ்ப் பகைவர் முப்பத்தி
ரண்டு பல்லும் !
ஈண்டுசுவை 'இசையமுது' இசையருவி எனவழியக்
கரையும் கல்லும் !
கூண்டோடு தமிழ் கெடுக்கும் கூட்டத்தை அவர்பாடல்
குத்திக் கொல்லும்!

இப்படியே பலப்பாடல் இம்மென்னும் முன்பாக
எழுதி ஈந்த
ஒப்பில்லாப் பாவலனை – பாரதிக்குத் தாசனை, இவ்
வுலுத்தர் எல்லாம்
எப்படித்தான் மறந்தனரோ ? அன்னவர்கள் மண்டையிலே
இருப்ப தென்ன ?
முப்பத்தி ரண்டு பற்கள் காப்பதற்கேனும் இனிவாய்
மூட வேண்டும் !

நூற்றாண்டுக் கொருபுலவன் எனத்தேர்ந்து பார்க்கையிலே
நிற்கின்றாரில்
ஏற்றினைப்போல் இருபதாம்நூற் றாண்டினிலே இணையற்றான்
இவனே ! காணீர் !
தூற்றுகின்ற கீழ்மனத்தீர் ! கிழக்கினைப்போய் மேற்கென்றே
கிளத்து கின்றீர் !'
மாற்றிடுவீர் உம்மனத்தை மாந்தரென உமைமக்கள்
மதிக்க வேண்டின் !

*("பாரதிக்குப் பின்...... பெரிய பாவலன் ந. பிச்சமூர்த்தியே! வேறு ஒருவர் பிறந்திலர்" என்று பிதற்றித் திரியும் அழகிரிசாமி, கா. ந. சு. ஆகியோரின் மடமை மிக்க கூற்றுக்கு மறுப்பாகப் பாடப் பெற்றது.)*

---


## தமிழ்ச்சிட்டு !

O "தமிழ்ச்சிட்டு" உங்கள் குழந்தைகளை நோக்கிப் பறந்துவர உருபா. இரண்டு உடனே அனுப்பி உறுப்பினராக்குங்கள்.

தமிழ்ச்சிட்டு கடலூர்–1

# பாரதியும் பாரதிதாசனும்

**ம. இலெ. தங்கப்பா**

பாரதி, பாரதிதாசன் இருவரும் தமிழ்ப் புலவர்கள். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். பாரதி சிறிது முன்னவர். அவரின் மாணவராகிய பாரதிதாசன் பாரதி காலத்தில் வாழ்ந்தாராயினும் அவருக்குப் பின்னும் நெடுநாள் வாழ்ந்து பாடியவர். இருவரும் உண்மைப் புலவர்களே. ஆயினும் இன்று பாரதியாரை அறிந்துள்ள அளவுக்கு வெளி உலகம் பாரதிதாசனை அறியவில்லை. தமிழகத்தின் தலைசிறந்த புலவர் யார் என்று தமிழ் கற்றுவரும் வெளிநாட்டினர் எவரையேனும் கேட்டால் 'பாரதி' என்றுதான் விடை வரும். அது மட்டுமன்று பாரதி ஒருவரே தமிழகத்தில் தலைநிற்பவர்; தமிழக இலக்கிய மறுமலர்ச்சிக்கு அடிகோலியவர்; அவரை விட்டால் தமிழுக்கு இன்று வேறு யாருமில்லை என்றும் பலர் நினைத்துக்கொண்டுள்ளனர். பாரதிதாசனைப் பற்றி ஒருசிலர் கேள்வியுற்றிருந்தாலும் அவர் பாரதியாரின் வழிநின்று ஏதோ சிறிது பாடியுள்ளார் என்ற அளவுக்குத்தான் கேள்வியுற்றிருக்கின்றனர்.

வெளிநாட்டைப் பற்றிக் கூறுவானேன்? நம் தமிழகத்தையே எடுத்துக் கொள்வோம். பாரதியாரை அறிந்துள்ள அளவுக்குத் தமிழர்கள் பாரதிதாசனை அறியவில்லை. பாரதியாருக்கு அளிக்கப்படும் விளம்பரத்தில் பத்தில் ஒன்று தானும் பாரதிதாசனுக்கு இல்லை. "தமிழ் என்றால் பாரதி; பாரதி என்றால் தமிழ்" என்கின்றனர். பாரதி தோன்றியதால் தமிழ் பெருமை பெற்றது என்கின்றனர். தலைசிறந்த இலக்கியப் புரட்சியாளர் என்றும் உலகப் பெரும்புலவர் என்றும் பாரதி கருதப்படுகின்றார். பாரதி விழா, பாரதி நினைவு நாள் நாடெங்கும் கொண்டாடப்படுகின்றது. இவ்விளம்பரக் கூட்டங்களிலெல்லாம் பாரதிதாசனின் பெயர் கூடக் கூறப்படுவதில்லை.

தில்லி அரசினர் பார்வையும் பாரதியாரின் மீதுதான் விழுந்துள்ளது. பாரதியாரையும் பாரதியாரின் பாடல்களையும் விளம்பரப்படுத்தவும் மக்களிடையே பரப்பவும் தில்லி அரசு அருமுயற்சி எடுத்துக்கொள்கின்றது.

இவற்றை எல்லாம் காணும் நம் நெஞ்சில் பெரியதொரு வினாக்குறி எழுகின்றது. அந்த வினாக்குறிதான் நம்மைப் பாரதியையும் பாரதிதாசனையும் ஒப்பிட்டுக் காணுமாறு தூண்டுகின்றது

பாரதிதாசன் தம் ஆசிரியராகிய பாரதியார் மேல் பெருமதிப்பு வைத்துள்ளார். அவரை உலகப் புலவர் என்று போற்றியுள்ளார். ஆயினும் இஃது பாரதிதாசனின் அன்புக்குச் சான்றே; பாரதியாரின் பெருமைக்கு அன்று.

பாரதியாரின் பாடல்களையும் பாரதிதாசனின் பாடல்களையும் நடுவு நிலையாக நின்று ஆய்தல்வேண்டும். இரண்டிலும் காட்டப் படும் உணர்வு, கருத்து, ஆழம், செறிவு, நுணுக்கம், அழகு, பயன் இவற்றை ஒப்பு நோக்கிக் காணல்வேண்டும். அப்பொழுதுதான் உண்மையை உணர முடியும். உண்மை எந்த அளவுக்கு இருட் டடிப்புச் செய்யப்படுகின்றது என்பதைத் தெரிந்து கொள்ளவும் முடியும்.

விருப்பு வெறுப்பின்றி இரு புலவர்களின் பாடல்களையும் அணுகு வோர் பாரதியின் புலமையினும் பாரதிதாசனின் புலமை பன்மடங்கு உயர்ந்தது என்று கண்டுகொள்ளலாம். பாரதி ஓர் உணர்ச்சிப் பெருக்கப் புலவர். அவரின் பாடல்களில் ஒரு துடிதுடிப்பு; எழுச்சி, ஒரு விரைவு, ஒரு பாய்ச்சல் இருக்கக் காணலாம். மக்களின் மடமை யையும், வறுமையையும் அடிமைத் தனத்தையும் கண்டு குமுறியது அவர் உள்ளம். குமுகாயத்தின் ஏற்றத் தாழ்வுகளையும், ஆங்கிலர் ஆட்சியால் ஏற்பட்டிருந்த அரசியல் மனவியல் அடிமைத்தனத்தையும், பெண்கள் மேல் சுமத்தப்பட்டிருந்த இழிவையும் கண்டு கொதித்தார் பாரதியார். அடங்காத பாட்டு வெறிக்கு ஆட்பட்டிருந்த அவர் உள்ளம் பாடத் தொடங்கியது.

''நெஞ்சு பொறுக்குதில்லையே— இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்''

''தனியொருவனுக் குணவில்லை எனில்
சகத்தினை யழித்திடுவோம்.''

''சாதி மதங்களைப் பாரோம்—
... ... ... ... ... ... ... ... ...
வேதியராயினும் ஒன்றே – அன்றி
வேறு குலத்தினராயினும் ஒன்றே''

''என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம் ?
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம் ?

இவை போன்ற அவர் பாடல்கள் அவரின் உள்ள எழுச்சியை—உணர்வுக் குரலைக் காட்டுவனவாம். பாரதிதாசனும் தம்மைச் சுற்றியுள்ள குமுகாயத்தின் கீழ்மைகளைக் கண்டு துடித்த துடிப்பில், கொதித்த கொதிப்பில் பாரதியாருக்குச் சற்றும் தாழ்ந்தவரல்லர்.

''வலியோர் சிலர் எளியோர்தமை
வதையே புரிகுவதா ?
கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே......"

'புதியதோர் உலகம் செய்வோம்—கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடும் சாய்ப்போம்."

''சாதிமத பேதங்கள் மூட வழக்கங்கள்
தாங்கி நடைபெற்று வரும் சண்டை உலகிதனை
ஊதையினில் துரும்பு போல் அலைக்கழிப்போம்......"

''இருட்டறையில் உள்ளதடா உலகம் – சாதி
இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே!"

''பெண்ணடிமை தீருமட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே."

என்றெல்லாம் முழங்கினார். பாரதியார் எந்தெந்தத் துறைகளிலெல்லாம் தீங்கு கண்டு கொதித்தாரோ அந்தந்தத் துறைகளிலெல்லாம் தாமும் சென்று பாரதியினும் கூர்மையாகத் தாக்கியவர் பாரதிதாசன். தொழிலாளியின் துயரைப் பற்றியும், கைம்மைக் கொடுமை பற்றியும், அறியாமையின் கேடுகளைப் பற்றியும், பெண்ணுரிமையின் இன்றியமையாமை பற்றியும் பாரதியாரினும் மிகுதியாகவும் அழுத்தமாகவும் பாடியுள்ளார் பாரதிதாசன்.

இவற்றை விடுத்து "இயற்கை"க்கு வருவோம். இங்கும் பாரதியின் எழுச்சி நிலையே புலப்படுகின்றது. அழகைக் கண்ட பேரார்வத்தில், புத்துணர்ச்சியில், களிப்பெருக்கில் சொற்களை அள்ளி வீசுகின்றார் பாரதியார்,

''பார், சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனைத் தீப்பட் டெரிவன ! ஓகோ!
என்னடி இந்த வண்ணத் தியல்புகள் !
எத்தனை வடிவம்! எத்தனைக் கலவை!

தீயின் குழம்புகள்! செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்! — ... ...
... ... ... ஆகா! எங்கு நோக்கிடினும்
ஒளித்திரள் — ஒளித்திரள்! வண்ணக்களஞ்சியம்!"

"காலை இளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறு
வேகத் திரைகளினுல் வேதப் பொருள்பாடி..."

"தங்கம் உருக்கித் தழல் குறைத்துத் தேனுக்கி
எங்கும் பரப்பியதோர் இங்கிதமோ? ... ...
... புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி
மண்ணைத் தெளிவாக்கி நீரில் மலர்ச்சிதந்து
விண்ணை வெளியாக்கி விந்தை செயும் சோதி."

இவ்வாறு இயற்கையால் தாமடைந்த பெருவியப்பினையே பாரதியார் புலப்படுத்துகின்ருர். இயற்கை பற்றி ஆங்காங்கே வரும் ஒருசில அடிகளைத் தவிர வேறு தனிப்பாடல்கள் இல்லை எனலாம்.

ஆனல் பாரதிதாசனின் அழகுணர்வோ பாரதியாரின் உணர்வினும் அகன்றது; ஆழ்ந்தது; நுணுகியது. இயற்கையழகு பற்றிய அவர் பாடல்கள் எண்ணற்றவை பாரதிதாசன் இயற்கையால் தாம் பெற்ற மகிழ்ச்சியை—உள்ளக் கிளர்ச்சியை மட்டும் பாடவில்லை. கூரிய விழிகளும் நுணுகிய நோக்கும், நெகிழ்ந்த நெஞ்சமும் கொண்டு இயற்கையின் ஒவ்வோரணுவிலும், ஒவ்வோரணுவின் அசைவிலும் ஈடுபட்டு அதனைப் படம்பிடிக்கின்ருர். இயற்கையின் மறைபொருளுக்கு விளக்கவுரையாளராக நிற்கின்ருர். இயற்கைப் பாவலர் என்றழைக்கப்படுவோர் பலர் வெளிப்படையானவும் கண்ணைப் பறிப்பனவுமாகிய காட்சிகளையே கண்டு அவற்றையே காட்டுகின்றனர். மயில் ஆடுவதும் குயில் பாடுவதும், பொழிலில் வண்டு தேன் அருந்துவதும், கதிரவனின் ஒளியும் நிலவொளியின் குளிர்மையும் மட்டுமே அவர்கள் உள்ளத்தைத் தொடுகின்றன. நுண்ணிய காட்சிகள் அவர்தம் உள்ளங்களாகிய புகைப்படப் பெட்டிகளிற் பதிவதில்லை. ஆனல் பாரதிதாசன் உள்ளமாகிய நுண்கருவியோ, இப்பாரிய காட்சிகளை மட்டுமன்று, மிகச் சிறிய-பிறர் பொருட்படுத்தாத காட்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றது.

"வேம்பின் பழம்பூ விரிதரை போல
ஈயின் கூடும் எறும்பின் கூடும்"

கிடப்பதையும், வீட்டுக் கூடத்தில் ஈக்கள் மொய்த்திருப்பது மிளகு கொட்டிக் கிடப்பதுபோல் தோன்றுவதையும், கீரியின் உடல்வண்ணம் போல் கடற்கரை மணல் மெத்தையும் நண்டுகள் பிள்ளைகள் போல் ஆடி ஓடுவதையும் பாரதிதாசன் காட்டுகின்றார்.

கடல் நீரும் நீலவானும்
கைகோக்கும்; அதற்கிதற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
எழில் வீணை; அவ்வீணை மேல்
அடிக்கின்ற காற்றே வீணை
நரம்பினை அசைத்தின்பத்தை
வடிக்கின்ற புலவன்; தம்பீ!
வண்கடல் பண்பாடல் கேள்!"

எனப் பாரதிதாசன் காட்டும் இனிய கற்பனை நுண்ணிதின் சுவைத்து மகிழற்குரியதேயன்றே!

"உன் அரும் உருவம் காணேன்
ஆயினும் உன்றன் ஒவ்வோர்
சின்ன நல் அசைவும் என்னைச்
சிலிர்த்திடல் செய்யும்; பெற்ற
அன்னையைக் கண்டோர் அன்னை
அன்பினைக் கண்ணிற் காணார்;
என்னினும் உயிர்க் கூட்டத்தை
இணைத்திடல் அன்பே யன்றே!"

என்று கண்ணிற் காணாத் தென்றலின் இன்பத்தையும் உயிர்க் கூட்டத்தை இணைக்கும் அன்பினையும் ஒருங்கே கண்டு அவ்வின்பத்தில் தோயும் நுண்மனம் பாரதிதாசனுடையது.

ஒளியின் அழகை மட்டும் அவர் காணவில்லை. இருளின் அழகையும் கண்டு மகிழ்கின்றார். வாடியிருக்கும் மக்கள் கூட்டத்தை அணைப்பது இருள் என்கின்றார். மலர் இதழ்களின் மேல் மின்னும் ஒளியைக் கண்டு மகிழ்வதோடு நில்லாமல், இதழ் தோறும் அடிப்புறத்தில் படுத்திருக்கும் அழகையும், அவ்வாறு இருள் இருப்பதால்தான் ஒளி எடுத்துக் காட்டப்பெற்று அழகு தோன்றுகின்றது என்பதையும்

அனைத்துள்ளும் அழகின் கமுக்கமாகத் திகழ்வது இருளே என்பதை யும் கண்டும் உணர்ந்தும் காட்டவல்ல நுண்திறன் உடையவர் பாரதி தாசன். இவ்வளவு நுண்ணிதாகப் பாரதியார் இயற்கையைப் பாட வில்லை. பாரதியார் நிலைகொள்ளாமல் பறக்கின்றார். பாரதிதாசன அழகுக் கடலுள் ஆழ்கின்றார். பாரதியாரின் உள்ள எழுச்சி எழுந்தது எழுந்தபடியே வெறும் துய்ப்புணர்வாகப் பாடல்வடிவில் வழங்கப் பெறுகின்றது. பாரதிதாசனின் உள்ள எழுச்சி எழுந்து படிந்து தோய்ந்து பின் கற்பனை நலத்துடன் பாடலாகக் கனிகின்றது.

ஒரு புலவனுக் கிருக்க வேண்டிய தன்மைகள் பல. உண்மை உள்ளம் வாய்ந்த ஒருவனுக்கு இத்தன்மைகள் அனைத்தும் வாய்க்கா மல் ஒன்றிரண்டு வாய்த்திருப்பினும் அவன் புலவனாகின்றான். அவன் புலமை பிறருக்கும் மகிழ்ச்சியூட்டுகின்றது. ஆயினும் அவன் உணர்ச்சியை முழுமையான வளர்ச்சியாகக் கூறுவதற்கில்லை. அவ னைப் புலவர்களுட் சிறந்தவன் என்றும் கூறமுடியாது. பாரதியா ரிடத்தில் உணர்வுப் பெருக்கையும், சொல்லழுத்தத்தினையும் மாந்த இயல்பறிவையும் கற்பனை வளத்தையும் காண்கின்றோம். பாரதிதாச னிடத்திலோ, உணர்வுப் பெருக்கோடு அறிவுக் கூர்மையினையும், சொல்லழுத்தத்தோடு சொல் நுட்பத்தினையும், மாந்தவியல் அறிவோடு மனவியல் அறிவையும் கற்பனை வளத்தோடு கற்பனை நயத்தினையும் காண்கின்றோம். குமுகாயத்தின் கேடுகளைச் சமட்டி போல் பாரதியார் சாடினார். பாரதிதாசனோ கூரிய கத்திபோல் குமுகாயப் புண்களை அறுத்தெறிகின்றார்.

இவ்வாறு புலமைத் திறத்தில் பாரதியாரை விஞ்சி நிற்கும் பாரதி தாசன் தமிழ் நாடு தமிழ்மொழி என்ற உணர்விலும் பாரதியாரி னின்றும் வேறுபட்டு உயர்கின்றார். பாரதி தமிழகத்தை இந்தியாவின் ஒரு சான்றாகவே கண்டார். பாரதி கண்ட தமிழ்ப் பண்பாடும் ஆரி யப் பண்பாட்டின் ஒரு கூறுபாடே. பாரதி இந்தியாவை ஆரிய நாடென்றும் சிறந்தோரை ஆரியர் என்றும் குறிக்கின்றார். இந்தி யப் பண்பாடு என்பது ஆரியப் பண்பாடே என்ற கருத்து ஒருமுக மாகப் பரவியிருந்த காலம் பாரதியாரின் காலம். பாரதி போற்றிய தமிழ் மொழியும் வடமொழிச் சார்புடைய தமிழ் மொழியே. இன்னும் இந்திய ஒருமைப்பாடு பேசுபவர் எடுத்துக் காட்டுவது இத்தகைய தொரு நிலையினையே. வெளி உலகுக்கும் தமிழ் மொழியும் தமிழ்ப்

பண்பாடும் ஆரியச் சார்புடையனவாகவே காட்டப் பெறுகின்றன. தமிழருட் சிலரும் இதுவே உண்மை என்று மயங்கித் திரிகின்றனர். இந் நிலையில் இப்போலி நிலைகளையெல்லாம் அறுத்தெறிந்து உண்மைத் தமிழ்ப் பண்பாட்டினையும் தமிழ் மொழியினையும் உலகுக்கு அறிமுகப் படுத்தும் பணியினில் பெரும்பங்கு கொண்டார் பாரதிதாசன் ஆவர். அவர் தம் இனவுணர்வுப் பாடல்களும் மொழியன்புப் பாடல்களும் தமிழக விடுதலை வேட்புப் பாடல்களும் தமிழரின் மயக்கினை அறுத்து, மூடிக்கிடந்த விழிகளைத் திறக்கச் செய்து, மாசேறிக் கிடந்த உள்ளங் களில் உணர்வு விளக்கேற்றித் தமிழர் தமக்குரிய தனிப் பெருமையை உணரவும் தலை நிமிர்ந்து நிற்கவும் வழிவகுத்த சுடர் விளக்கங்கள் எனலாம். பாரதியின் தேசிய பாடல்களுக்கு எத்துணை மதிப்புண்டோ அத்துணை மதிப்பிலும் பன்மடங்கு மதிப்பு பாரதிதாசனின் தமிழ் விடு தலைப் பாடல்களுக்கு உண்டு.

பாரதியாரின் உள்ளத்தையோ, நல்லுணர்வையோ நாம் குறை கூறவில்லை. அவர் வாழ்ந்த காலமும் கல்வி கற்ற சூழலும் பழகிய இடமும் அவரை உருவாக்கின. தமிழின் மேல் அவர் உண்மைப் பற்றுக் கொண்டிருந்த பொழுதிலும் உண்மைத் தமிழின் மேல் அவர் பற்றுக் கொண்டிருக்கவில்லை. காரணம், அஃது அவர்க்குத் தெரி யாமலிருந்ததே! ஆனால் பாரதிதாசனோ பல்வேறு சூழ்நிலைகட்கு நடு விலும் தமிழ் நாகரிகத்தின் உயிர்ப்பு நிலையைக் கண்டார். அதனைப் பற்றிக்கொண்டார். தம் பாட்டிலும் பேச்சிலும் அதனையே உயர்த்தி னார். தமிழர்க்கு உயிர்ப்பூட்டினார். இவ்வாறு தமிழுக்கும் தமிழர்க் கும் சரியான தொண்டு செய்தவர் பாரதிதாசனே!

ஆயினும் இன்று பாரதியே தமிழுக்கு மறுமலர்ச்சி ஊட்டியவர் என்றும் தமிழர்க்கு வழிகாட்டிய பெரும்புலவன் என்றும் புகழப்படு வதற்குக் காரணம் என்ன? இங்குத்தான் சில விரகுகள் அடங்கி யுள்ளன.

தமிழன் தன்னை மறக்க வேண்டும்; தன் தனித்தன்மையை முற் றிலும் இழந்து போகவேண்டும்; "இந்திய ஒருமைப்பாட்டில்" இரண் டறக் கலந்துவிட வேண்டும். இதனைத்தான் தில்லி அரசு எதிர்பார்க் கின்றது. இகற்குத் துணை புரிவன எவையோ அவற்றையெல்லாம் ஊக்குவிக்கின்றது. பாரதி தேசிய உணர்வின் பெயரால் வெள்ளைக்கார எதிர்ப்புணர்வை எழுப்புகையில் இந்தியா முழுவதையும் ஒன்றாகக் கண்டதாலும் இந்தியத் தேசிய உணர்வோடு கலந்து குழம்பிக்கிடந்த

தமிழுணர்வையே அப்பாடல்கள் எதிரொலித்த படியாலும் பா ர தி தங்கள் எண்ணத்துக்குச் சரியான கருவி என அவர்கள் க ண் டு கொண்டனர். இதன் முன்பே தமிழகத்தில் தமிழர்கள் என்ற பெய ரால் பிழைத்துவரும் பார்ப்பனர்கள் பாரதியை வானளாவப் பு க ழ த் தொடங்கிவிட்டனர். (பாரதி பார்ப்பனரின் பி ழை க ளை ச் சுட்டிக் காட்டியமையாலும், குலவேறுபாடுகளை எதிர்த்தமையாலும், பார்ப் பனர் தந்திர வாழ்க்கைக்கு மாறுகச் சில நேர்மையான சீர்திருத்த எண்ணங்களைப் பரப்பியதாலும் தொடக்க நிலையில் பா ர் ப் ப ன ர் வெறுத்தனர்; எதிர்த்தனர். ஆனல் பின்பு முழுவதுமாகப் பார்க்கை யில் பாரதியின் எண்ணமும் எழுத்தும் பொதுவாகத் தமிழ்ச் சார்பை விட ஆரியச் சார்பும் இந்தியச் சார்புமே மிகுதியாக உடையன என்று கண்டு கொண்டதால் அவரை உயர்த்திக் கூறி விளம்பரப்படுத்த லாயினர்.) இவ்விரு சாராரின் வலையில் விழுந்த ஏமாளித் தமிழரும் (முற்றும் தமிழுணர்வை அழிக்க நினைக்கும் ஒருசில ஏமாற்றுத் தமி ழரும்) பாரதியார் தமிழ்ப் பா வு ல கி ன் முதல்வர் என்று நம்பி அவர்க்கு விழா எடுக்கத் தொடங்கிவிட்டனர்.

ஆயினும் நடுவுநிலையோடு ஆய்ந்தால் பாரதிதாசன் பாவன்மை யால் பாரதியைவிடப் பன்மடங்கு உயர்ந்தவர் என்றும், தமிழுணர் வால் அவர் தமிழர்க்குப் பாரதியினும் மிக மிக நெருங்கியவர் என்றும் தெரிந்து கொள்ளலாம். பாரதிக்கு உரிய பு க ழை க் கொடுப்பதில் பிழையில்லை. தகுதிக்கு மீறிய இடத்தை – அதுவும் அன்பினல் அன்று, தந்திரமான வேறு காரணங்களால் அவர்க்களிப்பது பிழை. பாரதிதாசனின் தகுதிக்குரிய இடத்தை அவர்க்களிக்காமலிருப்பது அதனினும் பெரும்பிழை. O


## தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | உள் நாடு | கொழும்பு | வெளி நாடு |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6 உருபா | 7–25 உருபா | 9 உருபா |
| தனி இதழ் | 50 காசு | 60 காசு | 75 காசு |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனை யாளர்கள் எழுதிக் கேட்க.

அச்சாகு நூலெல்லாம் நூலாமோ? ஆங்கு சிலர்
மெச்சியுரை செய்வதனால் மேலாமோ? — முச்சில்
புடைத்துலையில் இட்ட புதுமணலைச் சோறாய்ப்
படைத்துவிட லாமோ பசிக்கு!

## கவிதைத் தலைவர் நேரு.

ஆக்கியோன்: சுரதா.
சேகர் பதிப்பகம். சென்னை–1.
விலை: 75 காசுகள்.

நாட்டுத் தலைவர் என்றாலே ஒருவரைப் பாட்டுத்தலைவர் ஆக்கிவிடும் போலி வழக்கம் பெருகிவருகின்றது. ஒருவரைப் புகழ்ந்துரைக்க விரும்பினால் அதற்காகப் பாட்டைத்தான் பயன்படுத்த வேண்டும் என்பதில்லை. நூலின் தலைப்பு என்ன பொருளில் அமைந்துள்ளது என்று விளங்கவில்லை. நேருவின் வாழ்க்கை ஒருவகையில் பாடாப் புலவனின் வாழ்க்கை எனலாம். கலையுள்ளம் வாய்ந்த அவரின் வாழ்க்கையில் பாடல் பெறுதற்குரிய பல நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. அவற்றைப் பாடலாக்கினால் அவர்தம் வாழ்க்கையும் குறிக்கோளும் படிப்பார் உள்ளத்தில் உணர்வு காலச் செய்து பசுமையாக நிற்பதுடன் பாட்டுச் சுவையும் பெருகும். நேருவும் பாட்டுத் தலைவர் என்ற பெருமைக்குரியவராவார். ஆனால் அத்தகைய ஒரு நிகழ்ச்சிதானும் இந்நூலில் இடம் பெறவில்லை. வெற்றுப் புகழுரைகளே மலிந்துள்ளன. நேருவின்பால் உண்மையான பற்றுடையவர் எழுதினாலன்றோ உண்மையானவற்றை எதிர்பார்க்க முடியும்!

“தென்னகத் துறவியொருவர் விழித்திருந்தார்; பசித்திருந்தார்; நேருவும் விழித்திருந்தார்; பசித்திருந்தார்” என்று நேருவுக்குச் சிறப்புத் தேடுகின்றார் ஆசிரியர். இதில் என்ன சிறப்போ! நமக்கு விளங்க

வில்லை.. திருடனும் விழித்திருப்பான்; பசித்திருப்பானே! அன்று தமிழ்ப் புலவரொருவர் பசியால் பறந்தாராம். நேருவும் இன்று பலகால் வானில் பறந்தாராம்! அடடா, என்ன சிறப்பு! என்ன நயம்! என்ன சொல்லணி! இத்தகைய போலிகள்தாம் பாரதிதாசனைவிட உயர்ந்தவர்கள் நாங்கள் என்று பிதற்றித் திரிகின்றனர்! ''காட்டுக்கு முன்காலத்தில் கமண்டல முனிவர் தேவை''யாம்! சுரதா கண்டு பிடித்துள்ள அரிய உண்மை இது! எதற்குத் தேவை, எப்படித் ''தேவை''? – என்பவற்றையெல்லாம் விளக்கத் தேவையில்லை...... எப்படியோ நாலு எதுகைகள் வரவேண்டும். காட்டுக்கு என்று தொடங்கினுல் அந்த அடியை எப்படியாவது முடிக்க வேண்டும். அது போதாதா ஒரு புலவனுக்கு? இறுதிப்பாட்டில்

''பாரில் மேருவும் இன்றில்லை
ப∴றுளியாறும் இன்றில்லை
... ... ... ... ... ... ... ...
ஓரீயும் பாரியும் இன்றில்லை
உத்தமர் நேருவும் இன்றில்லை ''

என்கிருர் ஆசிரியர். அதனுல் என்ன ? இல்லாமற் போனமையால் இவற்றுக்கு என்ன தனிச் சிறப்போ தெரியவில்லை.

அரசினர் சார்புடைய ஒன்றை அல்லது ஒருவரைப்பற்றி நூல் எழுதினுல் அரசினர் உதவியும் விளம்பரமும் கிடைக்கும் என்று இன்றைய தமிழ்ப் (போலிப்) புலவர் பலர் தன்மானம் துறந்து, 'பாரத மாதா; 'இந்திய ஒருமைப்பாடு', தலைவர் நேரு, தலைவர் சாத்திரி என்று பொருளற்ற வெற்றுரவாரப் பாடல்களையோ நூற்களையோ எழுதி எடுத்துக்கொண்டு, வானொலி நிலையங்களிலும் அரசினர் மாளிகைகளிலும் அமைச்சர் வீட்டுக் கொல்லைப்புற வாயில்களிலும் காத்து நின்று நின்று, இறுதியில் உதவியும் விளம்பரமும் பெறும் நிலையினை இன்று காண்கின்றேம். அத்தகைய வரிசைகளில் ஒன்றுதான் இந்த நூலும். இல்லையேல் சிறிதேனும் தமிழறிந்தார் எத்தனையோ பெயரிருக்கப் போயும் போயும் பக்தவத்சலத்திடம் (இந்நூல் வெளிவருகையில் முதல் அமைச்சர்) போய் அணிந்துரை பெறவேண்டிய இன்றியமையாமை ஆசிரியர்க்கோ பதிப்பகத்தார்க்கோ எப்படி நேர்ந்திருக்க முடியும் ?

''உவமைக் கவிஞர் சுரதா'' என்று ஆசிரியர் குறிக்கப் பெற்றுள்ளார். இதுவும் நமக்கு விளங்கவில்லை. உவமையைக் கையாளு

வது புலவனுக்குள்ள இயல்பான தன்மை என்றுதான் இதுவரை நினைத்திருந்தோம். அஃது ஏதோ பனிமலையின் முகடு போலவும், அதில் சுரதா ஒருவரே ஏறி நிற்பது போலவும் கருதிக் கொள்வது சுரதாவுக்கே எவ்வளவு இழுக்கு! சிறிய ஒன்றைப் பெரிதாகக் கருதிக் கொள்பவர் மிகவும் சிறியராகவே இருக்கமுடியும். உவமையைச் சிறப்பாகக் கையாளும் திறமை என்று கூறலாம். எவ்வளவுதான் சிறப்பாகப் பல் விளக்கிக் கொண்டாலும் ஒருவரை ''அன்றுடம் பல் விளக்கும் மாந்தர்,' என்று அழைத்தால் எப்படியிருக்கும்!

நூலின் பின் அட்டையின் உட்புறத்தில் சுரதாவின் தாய்நாட்டுப் பற்று ஒரு பாடலின் வழி விளம்பரப்படுத்தப் பெறுகின்றது. வேரூர் அயல்நாட்டுப் புலவனிடமிருந்து இரவல் பெற்ற வரிகள் பச்சையாக அப்பாட்டில் இடம் பெறுகின்றன. ஏ! தமிழ்ப் (போலிப்) புலவனே உன் தாய்நாட்டுப் பற்றும் இரவல்தானா ?

" கல்லாடன் "

---

# அமைச்சர், பொறுக்கி........!

பாவேந்தர் புதுவையில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் உள்ளூர் அமைச்சர் ஒருவரும் கலந்துகொண்டிருந்தார். பாவேந்தர் தம் பேச்சின் இடையில் ''இங்குள்ள அமைச்சர்கள் பொறுக்கி........." என்று குறிப்பிட்டுவிட்டு, மிசைப் பலகையின் மேல் வைக்கப் பெற்றிருநத காலகத்தை (Soda) எடுத்துக் குடிக்கத் தொடங்கினர். மேடையில் அமர்ந்திருந்த அமைச்சர் விழித்தார். கூட்டம் அதிர்ச்சியடைந்தது. அமைச்சருக்கு வேண்டிய சிலர் கூட்டத்திடை சலசலத்தனர். பாவேந்தர் காலக நீரைக் குடித்து முடிந்தவுடன் வாயைத் துடைத்து விட்டுக்கொண்டே புன்சிரிப்புடன் தொடர்ந்து, '........ எடுத்த மாணிக்கங்கள் !" என்று சொற்றொடரை முடித்தார். அமைச்சர் உள்பட கூட்டத்தினர் கலகலவென்று சிரித்துக் கைகொட்டி ஆரவாரம் செய்தனர்.

பாவேந்தரின் நகைச் சுவையையும் சொல்லாற்றலையும் அன்று எல்லாரும் வியந்து பாராட்டினர்.

# பாவேந்தர் நினைவுமாலை

## தமிழே நின்புகழ்:

நன்முல்லை.

படைத்திறம் நினைந்திலே! பாத்திறங் கொண்டனை!
நடைமுறை மலைந்திலே! நெஞ்சுர மார்ந்தனை!
முளைகிளர்ந் தன்ன மெலியா வுணர்வெழ,
தளைபிளந் தெறிந்தனை! தமிழ்ச்சூ ளுரைத்தனை!
தமிழ் நலங் காவாத் தமிழுடற் றடிந்தனை!
இமிழ் கடல் வரைப்பிற் றமிழ்மனை கோலினை!
கோலிய மனையும், கடைகாற் பணியும்
போலிமை சாராப் பாங்கொடு காத்தனை!
காத்தநின் விழியும் கனல்கொள் ளுயிர்ப்பும்
கூர்த்தநற் பாவும் பாவழிப் புதுமையும்
உள்ளுண் மகிழ்ந்தெழும் பிள்ளையங் குழைவும்
உள்ளுதற் கியலா உள்ளுறை செப்பமும்
யாண்டுள கொல்லோ? அறிகிலம் யாமே!
யாண்டுள வாயினு மாகுக! நிற்புகழ்ப்
பாடுக மல்லேம் பெரும!
பாடுவம் தமிழே! புகழ்நினக் கஃதே!

## "தமிழ்த்தேன் கொண்டல்"

சி. கோவிந்தசாமி

செங்கதிர் கிளம்பும், வண்ணச் செம்மலர் மணக்கும்; தென்றல்
மங்கிடும் தமிழர் வாழ்வு; மதிதரும் இன்பம்; வேட்கை
பொங்கிடும் புதுமைப் பாக்கள்; போற்றிடும் நாட்டுப் பற்று,
தங்கிடப் புனைவார் யாரே? தனிப்பெருந் தாசன் போலே!

முடிய பழமைக் குள்ளே, முடங்கிய புதுமை தன்னைத்
தேடிய புலவன்; பாரில் திரிதரும் அடிமை எண்ணி
வாடிய காலம் உண்டு, வாட்டிடக் கோலம் பூண்டு,
சாடிய வேந்தன், தாசன் சால்பெடுத் தியம்ப லாமோ ?

அஞ்சிடான் பகையை ஏற்க, அருந்தமிழ் பழித்தார் தீயர்
துஞ்சிடான் வீணர் தம்மைத் தூள்பட எதிர்க்கும் போது,
கெஞ்சிடான்; கெஞ்சும் வாணர் கீழ்நிலை இடித்துச் சொல்வான்;
விஞ்சிடான் குறைகள் தாங்க, வெல்புலி! தாசன் ஏறே!

தாய்மொழி காக்க நல்ல தனித்தமிழ் இயக்கந் தந்து,
வாய்மொழி நோக்கும் வேங்கை வளரிளம் இளைஞ ரிந்திப்
பேய்மொழி சிதைக்கப் பொங்கும் பெரும்படை யதனிற் சேர்த்த
ஆய்மொழிக் காவி ஆளுன்; அவன் பெரும் புலவ னன்றோ?

உலகினிற் புலமை கொண்டோர் ஓங்கிய நிலைக்கோர் சான்று !
பலகலை வேந்தன் எங்கள் பாரதி தாச மேலோன் !
அலகிலாப் பாடல் தந்த ஆர்தரு தமிழ்த்தேன் கொண்டல்!
நிலனிடைப் பிரிந்த துண்டோ? நெஞ்சினி மறக்குங்கொல்லோ?

## பாவலர்கள் முன்வருக !

— தமிழவேள்

பாரதிக்குத் தாசன் எனப்பெயரைப் பூண்டாலும்
பாரதியின் கூற்றுகளைக் கண்மூடிப் போற்ருமல்
"சொல்லிவிட்டான் பாவரசன் சொன்னதெலாம் மெய்அவனின்
சொல்லில் குறையேதும் காணேன்நான்" என்ருமல்,

வீடும் மனையும் விளக்கமுற வாழ்ந்திடவே
கூடும் இருவர்தாம் கொள்கின்ற நன்மணத்தை
"நாடுங்கால் நல்ல மணமில்லாச் செய்கை" யெனப்
பாடிவிட்ட பாரதியின் பாட்டுக்கு மாருகப்
பெண்ணொருத்தி ஆணொருவன் பெற்றபெறும் பேறெனவே
"கண்கள் உரைக்கின்ற காதற் கவர்ச்சியினுற்
கூடும் இரண்டுளத்தின் கூட்டினிலே தித்திக்கப்
பாடும் நறும்பா மண"மென்று பாடினையே !

தண்கடல்கள் மூன்றின் அலைக்கைகள் தாம் தழுவ
வெண்பனியில் மூழ்கும் உயர்மலைகள் நின்றணைக்க

உண்ணும் உணவால் உடுத்தும் உடைதன்னல்
பண்பால் பழக்க வழக்கத்தால் பேசுகின்ற
பன்மொழியால் வெவ்வேருய்ப் பாகுபட்டு நிற்பதுடன்
பன்னூருய் உள்ள பிரிவுக் குலமதனல்
நெல்லிக்கா யென்ன நெருக்கமில.ா தோடுகின்ற
பல்கோடி மக்கள் தமையீன்ற, "பாரதத்தாய்
முப்பது கோடி முகமுடையாள் என்ருலும்
தப்பா தவளுயிர் ஒன்றுடையாள்" என்றன்னேன்
பாடிய பாட்டில் பெரும்பிழையொன் றுள்ளதெனக்
கோடிட்டுக் காட்டும் வகையில் நீ, "இந்நாட்டில்
வாழ்கின்ருர் முப்பத்து முக்கோடி மக்களெனில்
சூழ்கின்ற வேற்றுமையும் அவ்வளவாம்" என்றனையே!

மன்னுலகில் மக்கள் அனைவர்க்கும் வேண்டியதை
அன்னை நிலமென்பாள் தள்ளாமற் தந்தாலும்
மண்ணில் பசியதனல் மாந்தர் அலைவதனைக்
கண்முன்னுற் கண்டு கொதித்தெழுந்த நெஞ்சினனுய்
"செய்வோம் விதியொன்று செய்ததனைக் காத்திடுவோம்
அய்யாவென் றேங்கும் ஒருவர்க் குணவில்லை
என்ருலும் இந்த உலகை அழித்திடுவோம்"
என்றவன் கூறியதை ஏற்காமல், "எங்கேனும்

பாழும் வயிற்றுப் பசியால் ஒருவன்தான்
கூழுக்கே குந்தி அழுவானேல் அவ்வகையில்
ஆளும் அரசின்கைக் கோலை முறித்திடுவோம்;
மீளநல் லாட்சி அமைத்திடுவோம்" என்றனையே!

நெஞ்சில் சரியென்று பட்டதனை இவ்வண்ணம்
அஞ்சாமற் சொன்ன பெருந்தகையே! பாவேந்தே!
உன்னைப்போல் பாவால் புரட்சியினைச் செய்திந்தத்
தென்னுட்டை உய்ப்பாரார் தேர்ந்து.

## தமிழர்க்குத்தென்றல்

புலவர். ப. பொன்னன்.

பாரதியின் தாசனவன் பாவுக்கு வேந்தன்
பார்மகளின் தலைமகளாம் பைந்தமிழ்க்கு மைந்தன்

பாரதிர்க்கும் புலவரிலே தலைசிறந்த புலவன்
பழைமைக்குப் பகைவனவன் புதுமைக்கு நண்பன்
ஊரறிந்து போற்றுகின்ற உயர்ந்தோன்காண்! மக்கள்
உளக்கோவில் அமர்ந்திருக்கும் செந்தமிழ்த்தாய் செல்வன்
பேரறிஞர் பெருந்தலைவர் வாழ்த்துரைக்க வாழ்ந்தான்
பிரிந்துவிட்டான் வருந்திடநாம் பெருந்துயரில் வீழ்ந்தோம்.

ஈன்றெடுத்த தமிழ்த்தாய்க்கே ஈந்துவிட்டான் தன்னை
இறவாத அவன் பணியால் மகிழ்ந்துவிட்டாள் அன்னை
தோன்றிவிட்ட பழங்கொள்கை தோற்றோடச் செய்தான்
தொல்லுலகில் தமிழ்ப்பெருமை தனைநாட்டி உய்ந்தான்
ஊன்றிவைத்தான் வித்தெனவே தமிழ்ப்பற்றை இங்கே
உணர்ந்துவிட்டோம் ஊதிவிட்டோம், தமிழ் முழங்கு சங்கே!
தேன்றுளியாம் தமிழமிழ்தம் எவ்வுலகும் நல்கச்
சென்றுவிட்டான் சிந்துகின்றோம் கண்ணீரை இங்கே !

"ஒன்றுக்கும் உதவாத எண்ணற்ற நூல்கள்
ஓதிவைத்தார் அவையே நம் உயர்வழிக்கும் வேல்கள்
என்றுணர்ந்து பழங்கதைகள் பாடுவதை நீக்கி
எழுதி வைத்தான் உயர் கதைகள் பாவியங்கள் பலவாம்
நன்றுடன்தீ தாய்ந்திடவே பகுத்தறிவை யூட்டும்
நற்பாவால், எண்ணுகின்ற உணர்வளித்தான் காண்பீர்
தென்றலவன் செந்தமிழ்க்குத் தெவ்வர்க்கோ வாடை
தென்னவருக்(கு) இளவேனில் ஒன்னலர்க்கோ கோடை! O

## மறைந்தான் ஏறு!

— தமிழ்நாடன்

குயில்கொண்டு பாவேந்தன் பாட்டென்னும்
அம்பெடுத்துத் தமிழர் நெஞ்சில்
துயில்கொண்ட உணர்வுகளைத் தொட்டெழுப்பிப்
பார்ப்பனரின் சூழ்ச்சிக் கெல்லாம்
மயல்கொண்டு தலையாட்டி! மடமைக்குப்
பணியாதீர்! அறிவாம் நல்ல
எயில்கொண்டு நல்வாழ்வை ஏற்கவென்றான்
எந்தமிழ்ப்பா வேந்த ரேறே! O

# பாவேந்தர்

# குரலொலி!

O தமிழரென்று சொல்லிக்கொள் கின்றோம் நாமும்;
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்புகின்றோம்!
எமதென்று சொல்கின்றோம் நாடோறுந்தான்!
எப்போது தமிழனுக்குக் கையாலான
நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?

O தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு, தமிழ மக்கள்,
தமிழ் என்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்ததில்லை!
தமிழர்க்குத் தொண்டு செய்யும் தமிழனுக்குத்
தடை செய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை.

O ......அந்தமிழர் மேன்மை
அழிப்பாரைப் போற்றுதற்கும் ஏடுபல வாழ்ந்தால்
எதிர்ப்பதன்றோ தமிழர்களின் எழுதுகோல் வேலை!
ஏற்றசெயல் செய்தற்கும் ஏன் அஞ்சவேண்டும்!

O வழிவழி வந்தஉன் மறத்தனம் எங்கே?
மொழிப்பற் றெங்கே? விழிப்புற் றெழுக!
இகழ்ச்சி நேர்ந்தால் இறப்போம் என்றும்
புகழ்ச்சியே எம் பூணும் என்றும்
வையம் ஆண்ட வண்டமிழ் மரபே
கையிருப்பைக் காட்ட எழுந்திரு!

O வஞ்சகர், வந்தவர் தமிழாற் செழித்தார்
வாழ்வினில் உயர்ந்தபின் தமிழையே பழித்தார்!
நம்செயல் ஒழுக்கங்கள் பற்பல அழித்தார்
நாமுணர்ந்தோம்; இந்நாள் அவரஞ்சி விழித்தார்!

O வாணிகர்க்கும் தமிழென்ருல் வெறுப்புண்டோ? அரசியல்சீர்
வாய்க்கப் பெற்ருேர்
ஆணிகர்த்த பேடிகளோ ? அரும்புலவர் ஊமைகளோ?
இல்ல றத்தைப்
பேணுமற்ற யாவருமே உணர்வற்றுப் போனுரோ ?
பெருவாழ் வுக்கோர்
ஏணி பெற்றும் ஏருத தமிழர்உயிர் வாழ்வதிலும்
இறத்தல் நன்றே !

O சோற்றுக் கென் ருெருபுலவர் தமிழ்எதிர்ப்பார் அடிவீழ்வார்;
தொகையாம் செல்வப்
பேற்றுக் கென் ருெருபுலவர் சாத்திரமும் தமிழ்என்றே
பேசி நிற்பார் !

O கடல்போலும் எழுக! கடல் முழக்கம்போல் கழறிடுக,
தமிழ்வாழ் கென் று !
கெடல் எங்கே தமிழின் நலம் ? அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

O சாதி ஒழிய வேண்டும் என்பதும்
தமிழக விடுதலை வேண்டும் என்பதும்
குள்ளக் கருத்தா? வெள்ளம் போன்ற
தமிழர் நலத்துக்குத் தக்கன அன்ருே!
அன்புடையீரே! அறிவுடைத் தமிழரே!
இருக்கும்போதே விடுதலை எய்தலாம்.
கட்சி வேண்டா. கலகம் வேண்டா.
எப்பிரி விற்கும் ஆட்படல் இன்னலே!
எல்லா மக்களும் இருப்புக் குண்டுபோல்
ஒன் று படுதல் வேண்டும் இன்றே!
பொதுப்போர்! புதுப்போர்! எழுக எழுக!
புதிய தோர்தமிழ் உலகம்
இதோ! இதோ! வெல்க எழிற்றமிழ் நாடே!

O செத்தவட மொழியினில் செந்தமிழ் பிறந்ததென் று
பொய்த்திடும்வை யாபுரிகள் போக்கினையும் 'ஆதரித்த'
கத்துநிறை 'காங்கிரசா' எங்கள் தமிழை — இங்குக்
காத்ததென் று புகன் றனை ? நாணமில்லையா ?

காளையர்கள் ஓதுதமிழ்க் கல்வியையும் பெற்றறியா
மூளிகளைக் 'காப்பிக்'கடை முண்டங்களை நல்லஎழுத்
தாளரெனும் 'காங்கிரசா' எங்கள் தமிழை — இங்குக்
காத்ததென்று புகன்றனை ? உணர்வில்லையா ?

கூறுதமிழ்ச் சொல்லாக்கக் குழுவினர் என்று சொல்லி
மாறுபட்ட வடசொல்லில் மாற்றுவதை ஆதரிக்கும்
வீறுதவிர் 'காங்கிரசா' எங்கள் தமிழை இங்குக்
காத்ததென்று விள்ளுகின்றாய் ? மேன்மையில்லையா ?

தூய்யதமிழ் மறைமலை, சோமசுந்தரம், திரு. வி
எய்து கலியாணம், பல இன்தமிழ்வல் லார் இருந்தும்
நொய்களைச்சார் 'காங்கிரசா' எங்கள் தமிழை — இங்குக்
காத்ததென்று நுவன்றனை ? கருத்தில்லையா ?

கோயில்மண வாயில்களில் கொஞ்சுதமிழ் நீக்கித் தங்கள்
தீயவட சொல்புகுத்தும் தெக்கணமுட்டிகட் கெல்லாம்
போய் அளக்கும் 'காங்கிரசா' எங்கள் தமிழை—இங்குக்
காத்ததென்று புகன்றனை ? கண்ணுமில்லையா ?

தென்னிலத்தை உழவில்லை; செந்தமிழ் விதைக்கவில்லை;
இந்நிலையில் இந்தி ஓதி நாட்டிடவும் எண்ணுகின்ற
புன்மையுறு 'காங்கிரசா' எங்கள் தமிழை – இங்குக்
காத்ததென்று புகன்றனை ? வெட்கமில்லையா ?

(இப்பாட்டு அவரின் பழம்பாடல் ஆகையால் பிறமொழிச்சொற்கள் கலந்துள்ளன. பாட்டமைப்பு கருதி அவற்றை அப்படியே வெளியிட்டுள்ளோம்,)

O ... ... ... பாடல்களில் அருஞ்சொற்கள் காணப்படலாம். ஒவ்வொரு பாட்டாலும் மாணவர் இரண்டோர் அருஞ்சொற்களேனும் அறிந்து கொள்ளாராயின், 'பாட்டினால் ஏற்படும் பயன் தான் என்ன ?' என்று கேட்கின்றேன்.

O உரைநடையால் ஒரு பொருளை விளக்குவதினும் பாட்டால் காட்டுங்கால் இனிது பதியும் என்பது உண்மை.

O தமிழார்வம் மிக்க இளைஞர்கள் தமிழ் முன்னேற்றம் கருதி இயன்றவாறு கிளர்ச்சி செய்யவேண்டும். ஒரு கூட்டம் கோயிலில் பிறமொழிக் கூச்சலைத் தடுக்க ஏன் முயலலாகாது? ஒரு குழுவினர்

தெருத்தோறும் சென்று பிறமொழி விளம்பரப் பலகையை மாற்றி யமைக்கச் சொல்லி ஏன் வற்புறுத்தலாகாது ? மற்றும் பலவகை யிலும் கிளர்ச்சி செய்யின், தமிழ் விடுதலை பெறும். தமிழ்நாடு விடுபடும்.

O தமிழுணர்வு மிகுந்த காலம் இது. தமிழர் தம் நிலையைக் கூர்ந்து நோக்கிவரும் காலம் இது. வாழாது வாழ்ந்த ஓரினத்தை, ஒரு தனிமொழியை அடியோடு கவிழ்க்கும் வடவர் முயற்சியை முளை யிலேயே கிள்ளிவிடுக. இல்லையெனில் பெருங்கொந்தளிப்பு ஏற் படும் தமிழ் நாட்டில் !

O தில்லிக் கழுகின் பிடியினின்று தப்பவேண்டும்; தில்லிக்குத் தமி ழகம் நல்ல பிள்ளையாக நடந்து கொள்வதன் வாயிலாகத் தமி ழர்க்கான நலன்களை அடைந்து கொள்ளலாம் என்று சிலர் எண்ணுகின்றார்கள். அது மயக்கமேயாகும். தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழ் இனம் என்பன பூண்டற்றுப் போகவேண்டும் என்பதுதான் தில்லிக் கழுகின் முடிவான எண்ணம். அஃது என்ன நினைக்கின்றது? தமிழகத்தில் நாலைந்து பேர்களைக் கையில் போட்டுக்கொண்டு நாலுகோடி மக்களையும் வேண்டிய படி சுரண்டி ஒழித்துவிடலாம். இது பகற்கனவாகத்தான் போகும். இன்று தெரியாது. இன்னும் சில நாட்களில் தெரிந்து கொள்ளும் தில்லிக் கழுகு. தமிழுணர்ச்சியைச் சிறிதெனஎண்ணி விடாதே தில்லிக் கழுகே! உன்னைக் காத்துக்கொள்ள முடியாது! உன் தருக்குப் போக்கைக் கைவிடு; அஞ்சு; நடுங்கு !

O தமிழர் வெள்ளம் பெருக்கெடுக்க வேண்டும். ஆகாசவாணி கிளம்பும் இடத்தை முற்றுகையிட வேண்டும். இரண்டு கேட்க வேண்டும். ஆகாசவாணி நிலையம் இருக்க வேண்டுமா? ஒழிய வேண்டுமா ? என்று.

இப்படிச் செய்யத் தமிழர்களால் தமிழர் தலைவர்களால் ஆக வில்லை எனில் தமிழர் வெள்ளம் கடல்வெள்ளத்தோடு கலந்து விட வேண்டும். தமிழர் வாழ்வுக்கே திருவாசகம் பாடி விட வேண்டும். மானமிழந்த பின் வாழாமை முன்னினிதே அன்றோ! வடக்கத்தியான் நம் 'வீரத்தை' அளந்து பார்க்கின்றான். நாம் பேடிகள் அல்லர் என்பதைக் காட்ட வேண்டாமா ?

BHARATHIDASAN.

## ஆங்கில மொழியாக்கம்

### THE SKY

Behold! The heavens themselves are boiling with rage at the injustice of man! Look at the starry sky O boy! It is like a body full of tears. Is it not so because it can't bear to see the labouring class becoming poorer on earth and the cruel, oppressing idlers becoming richer ?

Behold the moon! How like a cock it struts! Don't you feel its crowing even — sending forth its voice of illumination on all directions? And how the tiny stars look like little chickens straying away from their mother. *The moon seems to offer them protection;* for it drives away the darkness lingering like a prowling cat.

The rays of the sun spread throughout the day sky. The clouds painted pictures. What variety of colours and forms! Crowds of elephants, glimmering cataracts of ruby-red brilliance, blue mountain slopes, thick clouds of smoke and burring volcanoes, golden trees and groves!

Is the sun a golden ball thrown by maiden East falling into the blooming, flaming garden of the west ? Darkness

closes in. Women lighting the flames of their lamps keep away their darkness.

The cock crowed. The sun ploughed the darkness with his golden plough. And there slowly emerged the scene of the sea-engirt lands. It unfolded into the morning sky greeting the world.

The wind began to blow and the long blossoming branches danced in the wind. The clouds crowded round the sun — like a big mire clossing in. But soon the varied brilliance of the sun came up, blossoming into a beautiful rainbow.

The dark clouds invaded the bright day sky. And there was clash of arms. Bows and arrows and spears flashed. The clouds laughed their thunderous laugh. Soon there came a shower — a sign of nature glowing with victory at heart.

Now, It is noon. Even the honeyed flowers are burning. Fire itself becomes white hot. The jungles, the fields, the village, the hill, the groves the river and the sea are all on fire. The sun himself is burning in the fire he had made. The very bottom of the earth is burning!

The sun descended west from the zenith. The shadows of trees fell eastward. The clouds of various colours and hues gathered together. How fickle are they like false witnesses! They first show an elephant, and then change in to a mountain.

How vast the sky is! Think of you O man! The earth compared to the sky is a little nut and you are like an ant on the nut; are you not so variely ? What madness it is, then for men to talk about high and low among themselves.

பெயர்ப்பு: ம. இலெ. தங்கப்பா.

# பறவையினம்: "காகம்"

த. சலாவுத்தீன், அறி. ஆ. ப.

பறவைகள் பற்றிப் புகழ்வோர் பலர். அப் பறவைகளின் பழக்க வழக்கங்களை வைத்துப் பெண்களுடன் பொருத்திக் காட்டும் பாவலர்கள் உலகெல்லாம் மலிந்து கிடக்கக் காண்கின்றோம். இப் பறவைகளில் சிலவற்றைப்பற்றி நமக்குத் தெரியும். ஆனால் பல வற்றைப் பற்றி நமக்குத் தெரியாது. தெரிந்த பறவைகளின் பழக்க வழக்கங்கள் கூட நமக்குத் தெரியா.

"சீ! இஃது ஏன் இப்படிக் கத்திக் கொண்டிருக்கின்றது? யாராவது விருந்தினர்கள் வரப்போகிறார்களா" என்று காகம் கத்துவதைக் கேட்டு நம் வீட்டிலுள்ள பெண்கள் சொல்லுவது வழக்கம். காகம் கத்தினால் விருந்தினர்கள் வருவார்கள் என்பது ஒரு மூட நம்பிக்கை. இக் காக்கையைப் பற்றி நாம் இப்போது அறிந்து கொள்வோம்.

காக்கைகள் 'கார்வடே' (Corvidal) என்ற வகுப்பைச் சேர்ந் தவை. இவை நீண்டகாலம் உயிர் வாழும் ஆற்றல் பெற்றவை. இவற்றில் 32 வகைகள் உலகெங்கும் பரவியுள்ளன. நியூசிலாந்தில் மட்டும் காகங்கள் இல்லை. சிறப்பாக நாம் 5 வகையான காகங்களைப் பார்க்கலாம். இதில் இரண்டு வகைகளை அண்டங்காக்கைகள் என் கிறோம். மற்ற மூன்று வகைகளைக் காக்கைகள் என்கிறோம். இவற்றில் காட்டுப் பகுதிகளில் வாழ்வனவற்றிற்குக் "காட்டுக் காக்கைகள்" என் றும் ஊர்ப்பகுதிகளில் வாழ்பவற்றிற்கு "ஊர்க்காக்கைகள்" என்றும் பெயர். பொதுவாக எல்லாக் காக்கைகளும் கருப்பு நிறமுடையவை. இவற்றின் நீளம் ஏறத்தாழ 16 விரற்கடையிலிருந்து 20 விரற்கடை இருக்கும்.

**காட்டுக்காகங்கள்:** இவை காடுகளில் காணப்படும். இவற்றின் கூடுகள் மிக உயரமான மரங்களிலும் மலைகளின் சந்துகளிலும் இருப் பதைக் காணலாம். இவ்வினக் காக்கையின் நீளம் 21 விரற்கடை. இறக்கைகள் 13·5". வால் 7·5" முதல் 8" வரை இருக்கும். பார்ப்பதற்கு ஆணும் பெண்ணும் ஒன்றாகவே இருக்கும். இதன் நிறம் கரும்பழுப்பு நிறம். இஃது ஒருமுறைக்கு 3 அல்லது 4 முட்டைகள் இடும். முட்டை

யின்மீது பச்சை நீலம் கலந்த பழுப்பு வண்ணப் புள்ளிகள் காணப் படும். முட்டையின் அளவு ஏறத்தாழ $1{\cdot}6'' \times 1{\cdot}16''$.

**ஊர்க்காகங்கள்:** இவை மாந்தர்கள் வாழும் இடங்களில் வாழ்கின்றன. இவற்றின் கூடுகளை மரங்களிலும், பாறைகளின் பொந்துகளிலும் பார்க்கலாம். இவை எதையும் உண்ணும். இவற்றிற்கு வலிவான கால்கள் உண்டு. சில காக்கைகளுக்கு நிறத்தில் வேறுபாடு இருப்பதும் உண்டு. காக்கைகளுக்கு ஒளிரும் பொருட்களின் மேல் மிகுதியும் கவர்ச்சியுண்டு. ஒரு முறை பம்பாயில் ஒரு கடைக்குழன் விளம்பரத்திற்காக வைக்கப்பட்டிருந்த 150 உருபா மதிப்புள்ள பொன்னால் ஆக்கப்பட்ட கண்ணாடிச் சட்டத்தை (Spectacles) ஒரு காக்கை எடுத்துச் சென்று, அதைக் கொண்டு தன் கூட்டை அமைத்ததாம். கூட்டை எப்பொழுதும் ஆணும் பெண்ணும் சேர்ந்தே அமைக்கும். பறவை இனத்தில் மிகுந்த அறிவுடையது காக்கைதான் என்று உயிரி நூலார் கூறுகின்றனர். இக் காக்கைகளை நாம் நம் வீட்டில் நாய், பூனை, கிளி வளர்ப்பது போல் வளர்க்கலாம்.

**அண்டங்காக்கைகள்:** இவை சுமார் 26 விரற்கடைகள் நீளமுடையவை. இவை காக்கைகளிலேயே மிகுந்த நீளமும் மிகுந்த ஆற்றலும், மிகுந்த அறிவும் உடையவை. ஒரு பெண் காக்கை 3-இலிருந்து 8 முட்டைகள் இடும். முட்டைகள் மெல்லிய பச்சை நிறமுடையவை. இவற்றின்மேல் பொடி நிறப் புள்ளிகளிருக்கும். உலகத்திற்கு முதன் முதலில், "நோவாவின் படகி" லிருந்து அனுப்பப்பட்ட பறவை அண்டங்காக்கைதான் என்று பைபிள் கூறுகின்றது. இது தன் கூட்டை உயரமான மரங்களின்மீது கட்டும். இது சிறிய பறவைகள், ஆட்டுக்குட்டிகள், பாம்புகள், பூச்சிகள் முதலியவற்றை உணவாகக் கொள்ளும். இது 'கிர்-ர்-ர்-குருக்' என்று ஒலி உண்டாக்கும். இஃது அறிவுள்ளதாகையால் நாம் வளர்க்கலாம். சிறிய சொற்கள் கற்றுக் கொடுக்கலாம். அவற்றைத் திருப்பிச் சொல்லும் ஆற்றல் படைத்தது. இது பளபளக்கும் கருப்பு நிறமுடையது. முகிலின் வண்ணத்தைப் பெண்களின் கறுத்து அடர்ந்த குழலுக்கு ஒப்பிடுகின்றோம், இதே போல் அண்டங்காக்கையின் வண்ணத்தை பெண்களின் குழலுக்கு மேனாட்டார் ஒப்பிடுகின்றார்கள்.

போர் நடக்கும்போது பட்டாளப் பாசறைகளில் இரவு நேரத்தில் மறவர் சிலரை இரவுக் காவலர்களாக நிறுத்துவார்கள். இதேபோல்

காகங்களில் சில இரவில் இரவுக் காவலர்களாக வேலை பார்க்கும். ஏதாவது ஏதமென்றால் இவை ஒலி செய்து மற்றவற்றை எழுப்பி விடும்.

காக்கைகள் நிலத்திணைகளை அழிக்கும் பூச்சிகளை உண்பதால் நமக்கு நன்மை செய்கின்றன; தவச வகைகளை உண்பதால் நமக்குத் தீமையும் செய்கின்றன. கனடாவில் வாத்துகளை வளர்க்கு மிடங்களில் இக்காக்கைகள் வாத்து முட்டைகளை மிகுந்த அளவில் பாழ்படுத்துவதால் இவற்றிடமிருந்து முட்டைகளை மிகுந்த காப்புடன் வைக்கின்றனர். மற்ற சில காக்கைவகைகளின் பெயர்கள் 'புளுசே' (Bluejay) மேபை (Mepy) சேக்டா (Jackdaw) 'சே' (Jay) உருக் (Roock).

காகம் வீட்டருகில் ஓயாமல் கத்துவதால் விருந்தினர்கள் வருவார்கள் என்பது 'காக்கை உட்காரப் பனம்பழம் வீழ்ந்த'' கதைதான்.

---


- பாவேந்தர் பாரதிதாசன் எழுதிய — இதுவரை வெளிவராத இலக்கியங்கள்.
- அவர் வாழ்க்கையின் சுவையான நிகழ்ச்சிகள்.
- அவர் எழுதிய அரிய வரலாற்றுக் குறிப்புகள்.
- அவர் திருக்குறளுக்கு எழுதிய உரைப் பகுதிகள் முதலிய சுவையான பகுதிகளைத் தாங்கி வெளிவருகின்றது.

# பாரதிதாசன் குயில்

## திங்கள் இதழ்

### ஆசிரியர்: மன்னர்மன்னன்

தனி இதழ் 75 காசு ஆண்டுக்கட்டணம்: 10 உருபா.

பிற விளக்கங்கட்கு

உரிமையாளர்

**'பாரதிதாசன் குயில்'**

புதுவை-1.

# வேறென்ன சொல்வது?

O உ. பி. யில் சாதிப்பெயர் உணர்ச்சிக்குக் கல்லறை! உ. பி. அரசின் துணிச்சலான நடவடிக்கை! — 'விடுதலை' தலைப்புச் செய்தி

**அந்தத் துணிச்சல் 'விடுதலை' யில் காட்டப்படவில்லையே! ஏன்?**

O இந்தியாவில் பள்ளி செல்லும் 8 கோடி குழந்தைகளுக்கு ஊட்டம் குறைவு. — நலத்துறைக் கருத்தரங்கின் செய்தி.

**ஊட்டமில்லாத பெற்றோர்க்குப் பிறந்த குழந்தைகள் பின் எப்படி இருக்கும் ?**

O புதுமையான அரிசிக் கடத்தல் – கழுதையின்மீது கடத்திச் சென்றனர். — தினத்தந்தி செய்தி.

**இதில் என்ன புதுமை? காவலர் வண்டிகளில் மது கடத்தப்படுவது தினத்தந்திக்குத் தெரியாதா ?**

O பெரியாருக்கு வேலூர் நகராட்சி வரவேற்பு. பேராயக் கட்சி உறுப்பினர் கலந்துகொள்ளவில்லை. — செய்தி.

**இது பறவைகள் காலம் !**

O உருபாவுக்கு ஒருபடி அரிசி தரத் தில்லியின் உதவியை நாடுவோம்! — அண்ணாத்துரை.

**தில்லி என்ன நெல் களஞ்சியமா ?**

O வட்டார மொழி வளர்ச்சியுடன் இந்திய இணைப்பு மொழியும் தேவை. அதற்குத்தான் இந்தி. — 'இந்திரா' காந்தி.

**இந்திய இணைப்பே தேவையில்லை என்றாகிவிட்டால்...?**

O இந்தி கட்டாய பாடமாகாது. அது நம்மேல் திணிக்கப்படவும் இல்லை. — நெடுஞ்செழியன்.

**பேச்சில் 'பக்தவத்சலம்' வாடை வீசுகிறது.**

O தமிழக அமைச்சரவையில் இன்னும் அமைச்சர்கள் சிலரும், துணையமைச்சர்கள் சிலரும் சேர்க்கப்படுவர். — முதலமைச்சர்.

**சிறிய தலை; பெரிய தலைப்பாகை !**

O மருத்துவக் கல்லூரிகளில் இனி மதிப்பெண்களின் அடிப்படையிலேயே மாணவர்கள் சேர்க்கப்படுவர். — அண்ணாத்துரை.

**'மார்க்' என்றார் பக்தவத்சலம். 'மதிப்பெண்' என்கிறார் அண்ணா.**

O பம்பாயில் தமிழகப் புலவர் குழுவின் மாநாடு! தமிழக அமைச்சர்களும் கலந்து கொள்வர். — செய்தி.

மேடை எதுவானுல் என்ன ? நாடகம் ஒன்றுதானே!

O திருமண அகவையை உயர்த்துவதற்கு அனைத்திந்தியப் பெண்டிர் கழகம் கண்டனம். — செய்தி.

உண்(ர்)வுச் சிக்கல்......! ?

O இணைப்பு மொழிச் சிக்கலை ஆராய 9 மாநிலக் கல்வியமைச்சர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டது. – செய்தி.

பல முயற்சி; ஒரு முடிவு!

O கேரளத்தில் மதுவிலக்கு நீங்கியது! — செய்தி.

வியப்பென்ன ? உள் வீட்டில் நடந்தது இனி வெளித்திண்ணையில் நடக்கும்!

O சிறைக்கூடங்களில் சீர்திருத்தம் செய்யத் தமிழக அரசு நாட்டம். — செய்தி.

2 திருத்தங்கள் தருகிருேம். சேர்த்துக் கொள்ளுங்கள்.

1. வகுப்பு வேற்றுமைகளை அறவே விலக்கிவிடலாம்.
2. குற்றவாளிகளைப் பல குழுக்களாகப் பிரித்துத் தங்களுக்கு வேண்டிய உணவைத் தாங்களே பயிரிட்டுக் கொள்ளும்படி செய்யலாம். புதிதாக வருபவர்களை ஏற்கனவே உள்ள குழுக்களுடன் சேர்த்துவிடலாம்.

இவ்விரண்டு திருத்தங்களாலும் பல நன்மைகள் விளையும். இவையன்றிக் கவிப்பு(குல்லாய்)களை எடுத்துவிடுவதாலும் 'துரை' என்று அழைப்பதைத் தடுத்து விடுவதாலும் மட்டும் என்ன சீர்திருத்தங்கள் ஏற்பட்டுவிடும் என்று அரசு கருதுகிறது ?

O நேருவின் படிமம் சென்னையில் அமைக்கப்படும். மாநகராட்சியின் தீர்மானம். — செய்தி.

இறந்துபோன தலைவர்களுக்குப் படிமம் அமைப்பது இருக்கட்டும்! இறந்து போனவர்களின் கருத்துரைகள் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு ஏதாகிலும் பயன் படுகின்றதா என்று எண்ணி அதைச் செயற்படுத்துங்கள்!

O நாணயமற்றவர்கள் அரசியலில் புகுந்து குழப்புகின்றுர்கள். — பெரியார்.

நாணயமற்றவர்களுக்குத்தானே அது புகலிடம். நாணயம் உள்ளவர்கள் பேசினுல் அங்கு எடுபடுமா என்ன ?